பக்கங்கள் பத்து

Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு2030 வைகாசி 19 புதன்கிழமை (02-06-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 161

## கண்ணியில் சிக்கிய பயணிகள் வான்; பதினொரு பொதுமக்கள் மரணம்!

### வெலிஓயாவில் திங்கள் இரவு பயங்கரம்

கொழும்பு, ஜூன் 2

வெலிஓயாவில் வெசாக் நிகழ்ச்சியில் பங்குகொண்டுவிட்டு 18 பேருடன் சென்று கொண்டிருந்த வான் ஒன்று கிளைமோர் கண்ணிவெடியில் சிக்கியது

நேற்றுமுன்தினம் இரவு 8-30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஐந்து பெண்கள் உட்பட பதினொரு பொதுமக்கள் உயிரிழந்ததாகவும் —

ஏழு பொதுமக்கள் காயமடைந்ததாகவும் —

[10 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். குடாநாட்டில் நேற்று ஹர்த்தால்!

யாழ்ப்பாணம், ஜூன் 2

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் படுகொலைகளைக் கண்டித்தும்—

பொதுமக்களைப் பாதிக்கும் வகையில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அரச அலுவலகங்களை மூடி விடுமாறு விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிவுறுத்தல்களை ஆட்சேபித்தும்—

யாழ். குடாநாடு முழுவதும் நேற்று ஈ. பி. டி. பியின் அழைப்பின் பேரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

இந்தக் ஹர்த்தாலையொட்டி வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் பெரும்பான்மையானவை மூடப்பட்டிருந்தன பாடசாலைகளுக்கு குறைந்தளவு மாணவர்கள் வருகை தந்த போதிலும் வழமையான நேரத்திற்கு முன்னதாக மாணவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். நகரிலுள்ள வங்கிகள் உட்பட குடாநாட்டில் பல இடங்களிலும் உள்ள

[2 ஆம் பக்கம் பார்க்க]

## உள்ளூராட்சிச் சபை உறுப்பினருக்கு பாதுகாப்புத் தராவிட்டால் இராஜினாமாச் செய்வோம்!

### அரசுக்கு ஒரு மாத காலக்கெடு வழங்குவதாக புளொட் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். குடாநாட்டின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்—ஏற்புடைய—திட்டம் ஒன்றை இந்த மாத இறுதிக்குள் அரசாங்கம் முன்வைக்காவிட்டால் புளொட் அமைப்பைச் சேர்ந்த உள்ளூராட்சி உறுப்பினர்கள் கட்டம் கட்டமாகத் தமது பதவியை இராஜினாமாச் செய்வார்கள் என்று அந்த அமைப்பு அறிவித்திருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பாக அந்த அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த ஆண்டு ஜனவரியில் ஸ்ரீலங்கா அரசு யாழ். குடாநாட்டில் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லாத போதும் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதில் முனைப்பாகநின்று தேர்தலை நடத்திமுடித்தது. தேர்தலில் தெரிவான உறுப்பினர்கள், தலைவர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதற்கு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது பார்த்துக் கொண்டிருப்பதற்கு 'புளொட்'

(9 ஆம் பக்கத் தொடர்])

## ரகுவின் இறுதிக்கிரியை நேற்று ஊர்காவற்றுறையில்

யாழ்ப்பாணம், ஜூன் 2

கந்தர்மடம் பழம்வீதியில் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ. பி. டி. பி. அமைப்பின் நல்லூர் பிரதேசப் பொறுப்பாளரும், நல்லூர் பிரதேச சபையின் உபதலைவருமான தியாகராஜா ராஜ்குமாரின் (ரகு) இறுதிக் கிரியைகள் நேற்றுமாலை ஊர்காவற்றுறையில் இடம்பெற்றன.

யாழ். ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற மரணவிசாரணையின் பின்னர்பூதவுடலை பொறுப்பேற்ற ஈ. பி. டி. பி. அமைப்பினர் நகரில் உள்ள தமது அலுவலகத்தில் அதனை அஞ்சலிக்காக வைத்தனர்.

அதன் பின்னர் திருநெல்வேலியில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் நல்லூர் பிரதேச சபையில் வைக்கப்பட்டு அங்கு அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### 4 ஆவது நாளாக

## அரச செயலகங்கள் நேற்றும் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். அரச அலுவலகங்கள் மற்றும் திணைக்கள பணிமனைகள் நேற்று செவ்வாய்க்கிழமை நான்காவது நாளாகச் செயலிழந்தன.

செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களில் அரச அலுவலகங்களை மூடுமாறு விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிவுறுத்தலைத் தொடர்ந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணிப் புதைகுழியில் மீட்கப்படும் சடலங்களில் மரபணுப் பரிசோதனை

### அடையாளம்காண விஞ்ஞான ரீதியில் முயற்சி

கொழும்பு, ஜூன் 2

செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்படும் போது மீட்கப்படும் சடலத்துக்குரியவரின் மரபணுக்களை உயிருடன் இருக்கும் அவரது பெற்றோர் அல்லது சகோதரர்கள் போன்றோரின் மரபணுக்களுடன் ஒப்பிட்டு சடலத்துக்குரியவர் அடையாளம் காணப்படுவர் என்று நிபுணர் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

அனேகமாக இம்மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்போதே மீட்கப்படும் சடலங்கள் டி. என். ஏ எனப்படும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு சடலத்துக்குரியவர் அடையாளம் காணப்படுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை—

புதைகுழிகள் தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்படும் போது அதில் அமெரிக்காவைச் சேர்ந்த விசேட வைத்திய நிபுணர்கள் மூன்று பேர் பங்குபற்றவிருக்கின்றனர் என்று ருகுணு பல்கலைக் கழக சட்டவைத்திய நிபுணர் பேராசிரியர் சந்திரசிறி நிரியல்ல தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### சிவில்நிர்வாகம் குழப்பப்படுவதற்கு எதிரான

## படையினரின் பதில் நடவடிக்கை அடுத்து வரும் தினங்களில் தெரியும்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச செயலகங்கள் மற்றும் திணைக்களப் பணிமனைகள் புலிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மூடப்படுவது குறித்து தாங்கள் எடுக்கவிருக்கும் பதில் நடவடிக்கைகளை அடுத்து வரும் தினங்களில் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் வெளியிடுவதாக வடக்கு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா நேற்றுத் தெரிவித்ததாக அறியவந்தது.

[10 ஆம் பக்கம் பார்க்க]

## சித்திரவதைகள் குறித்து மன்னிப்புச்சபை சீற்றம்

கொழும்பு, ஜூன் 2

இலங்கையில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்படும் தமிழர்களை படையினரும் பொலீஸாரும் தொடர்ந்து மோசமான முறையில்சித்திரவதை செய்கின்றனர்.

சர்வதேச மன்னிப்புச்சபை அண்மையில் வெளியிட்டுள்ள தனது அறிக்கையில் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த அறிக்கையில் சித்திரவதைகள் தொடர்பாக அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் சர்வதேச மன்னிப்புச் சபை கடுமையாகக் குறை கூறியுள்ளது.

சித்திரவதைக்கெதிரான சர்வதேச உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கம்
31 - 05 - 99 தொடக்கம்
யாழ். போதனா வைத்தியசாலையில்
இயங்குகின்றது என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

செயலாளர்
யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை
கூ. சி. சே. கடு நி. சங்கம்

(66273)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## சிவஞானம் அன்னம்மா

சரசாலை மத்தியைச் சேர்ந்த திருமதி சிவஞானம் அன்னம்மா 31-05-99 ஆம் திகதி இறைபதம் எய்தியுள்ளார்.

இவர் காலஞ்சென்ற சிவஞானத்தின்(உப அதிபர் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி) அன்பு மனைவியும், திரு. அருணாசலம் (லண்டன்) மணிவாசன் (காஸ் கொம்பனி கொழும்பு), செந்திவாசன்(கனடா) ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு: முருகையா, ஆனந்தி, கமலவதி ஆகியோரின் அன்பு மாமியும், கார்த்திகா, சுபேதா, ஸ்ரீராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரு. அ. செல்லத்துரை (சிவதொண்டர் நிலையம் செங்கலடி), அ. சின்னப்பா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற வீரகத்தி, பார்வதி, திருமதி சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
ச. க. முருகையா
முகாமையாளர்,
கிராமிய வங்கி.
நீர்வேலி.

சரசாலை மத்தி,
சரசாலை.
(60275)

## திருமதி ஜெயராணி
## சிவபாலசுப்பிரமணியம்
(பாப்பா)

கன்னியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராணி சிவபாலசுப்பிரமணியம் 31-05-99 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவபாலசுப்பிரமணியம்(சிவா ஸ்ருடியோ உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் சுபாஜினி (கொழும்பு). நிரோஜன் (கனடா), சேந்தன் (கொழும்பு), மயூரிகா (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (3-6-99) வியாழக்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
இ மகேஸ்வரி
(மாமி)

பிள்ளையார் வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு,

[சி/7749]

## திருமதி ஹெலன்
## தங்கரட்ணம் அருளப்பு

கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஹெலன் தங்கரட்ணம் அவர்கள் 01-06-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாவிலுப்பிள்ளை அருளப்பு அவர்களின் அன்புமனைவியும், காலஞ்சென்ற திருமதி அன்னம் அன்ரனிப்பிள்ளை, காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை இராசேந்திரம், காலஞ்சென்ற இரப்பியேல் பிள்ளை ஆகியோரின் அன்புசகோதரியும், ராஜரட்ணம் (ஹொலண்ட்), அன்ரனெற் ஜெயசீலி, யசிந்தா (R D. H. S. யாழ்ப்பாணம்) ஜோசப்பின் (ஆசிரியை, கன்னியர் மகாவித்தியாலயம்). ஜெயரட்ணம் (ஹொலண்ட்) நிர்மலா((இலங்கை வங்கி வெள்ளவத்தை)ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தினி, மரியதாஸ் (O.A.T. நிர்மாணத் திணைக்களம்), ஆனந்தராஜா(லிகிதர், சென் பற்றிக்ஸ் கல்லூரி), காலஞ்சென்ற தேவஜானேந்திரன், லுசில்டா(ஹொலன்ட்), ஜெயராஜா(களஞ்சியப் பொறுப்பாளர், பான் ஒடியோ கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும். கிஷோர், மரியா, டினேஷ், மடோனா, டிலானி, வினோதன், தர்ஷன், ஜெரோல்ட் ஜொசேனா, பிறேமி, யூட் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், திருமதி றெபேக்கா விஜயநாதன், அருட்திரு. யோ. யோ. எட்வேட் (அ.ம.தி. பாகிஸ்தான்) பிலிப், அருட்திரு. யோ. யோ. மவுலிஸ்(நாரந்தனை)ஆகியோரின் சிறிய தாயாரும், திருமதி ராஜு இம்மனுவேலின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (02-06-99) பி.ப. 3.30 மணிக்கு (புதிய நேரம்) புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. ச. மரியதாஸ்
(மருமகன்)

64, பழையபூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(66249)

## திருட்டு

கோண்டாவில், ஜூன் 2

கோண்டாவில் கிழக்கில் இரவு வேளையில் கடையை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் சுமார் ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடினர்.

(இ-69)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

வங்கிகளும் காலையில் திறக்கப்பட்ட போதிலும் ஓரிரு மணித்தியாலங்களின் பின்னர் மூடப்பட்டன.

வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு யாழ். நகரில் சன நடமாட்டம் குறைந்திருந்த போதிலும் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களும் மற்றும் மினி பஸ்களும் சேவையில் ஈடுபட்டன.

யாழ். நகரில் சிற்றுண்டிச் சாலைகள், மற்றும் மருந்துக்கடைகள் திறந்திருந்தன. இவற்றில் வழமை போன்று வியாபாரம் நடைபெற்றன.

குடா நாட்டின் சில பகுதிகளில் ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினர்களினால் மூடப்பட்ட கடைகளைத் திறந்து வியாபாரம் செய்யுமாறு படையினர் வலியுறுத்தினார்கள்.

வீதிகளில் ஆங்காங்கே ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களிலும், சைக்கிள்களிலும் ரோந்து சென்று ஹர்த்தால் நடவடிக்கைகளை வழிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

(உ-3-5-7-15-139-90-100-117-180-86-109-103-152-31 51-27)

எமது புதிய ஓடியோ வெளியீடுகள்
① சுயம்வரம்
நான்கு முன்னணி இசையமைப்பாளர்களின் இசையில்
② டைகர்
மெலோடியஸ் மியூசிக்
303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(66276)

லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
சரண்ராஜ் - சுருதி
நடித்த
அண்ணன் தங்கச்சி
காட்சிகள்; 10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(66140)

நாகம்ஸ்
சுன்னாகம்.
அர்ஜுன் - ரஞ்சிதா
கவுண்டமணி - செந்தில்
நடித்த
ஜெய்ஹிந்த்
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(66252)

ராஜா
யாழ்ப்பாணம்
விஜய் - தேவயானி
ரம்பா - மணிவண்ணன்
செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன்
வந்தாய்
10-30, 2-30
(சி/7740)

# உற்சவத்துக்கு சென்றோர் திருப்பி அனுப்பப்பட்டனர்

தென்மராட்சி, ஜூன் 2

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இயக்கச்சி திரியாய் கண்ணகை அம்பாள் ஆலய பொங்கல் உற்சவத்திற்கு சென்ற பலர் கத்தாப்படி சோதனைச் சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உற்சவத்திற்குச் சென்ற இளைஞர்களும் யுவதிகளும் அடையாள அட்டை இல்லாதவர்களுமே திருப்பி அனுப்பப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

வாகனங்களில் சென்றவர்களில் சிலர் திருப்பி அனுப்பப்பட்டதால் ஏனையோரும் வாகனங்களுடன் வீடு திரும்பினர்.

(இ-117)

# பயிற்சிப் பட்டறை

வலி. வடக்கு, ஜூன் 2

ஐ. நா. அபிவிருத்தித் திட்டப் பிரிவின் உதவியுடன் சுகாதார சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த டாக்டர்கள், தாதிகள். பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் எழுதுவினைஞர்களுக்கான பயிற்சிப்பட்டறை தெல்லிப்பழை சுகாதாரப் பணிமனையில் இடம்பெறுகின்றது.

தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு நடைபெறுகின்ற இந்த பயிற்சிப்பட்டறையில் திட்டமிடல், தீர்மானம்செய்தல் போன்றவை சம்பந்தமான பயிற்சி வகுப்புக்களும் கலந்துரையாடல்களும் நடைபெற்று வருகின்றன.

இந்த பயிற்சிப் பட்டறையில் பல தரத்தினையும் சேர்ந்த இருபத்துமூன்று ஊழியர்கள் பங்கேற்றுள்ளனர்.

(இ-86)

# கைக்குண்டு வீச்சில் ஒரேகுடும்பத்தில் மூவர் பலி

## இராணுவச் சிப்பாய் சரண்

கொழும்பு, ஜூன் 2

அநுராதபுர பொலீஸ் பிரிவில் உள்ள பரசன்கஸ்வெல என்ற இடத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர். அவர்களைக் கொன்றதாகக் கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் சரண் அடைந்துள்ளார்.

அதிகாலை 2-30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அநுராத புரத்திலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அநுராதபுரம் — யாழ்ப்பாணம் வீதியில் பரசன்கஸ்வெல உள்ளது.

கணவர்—மனைவி உட்பட ஆறுமாதக் குழந்தை ஒன்றும் கொல்லப்பட்டுள்ளது.

சந்தேக நபர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர் என்றும் இவரது பெயர் சுஜீவ என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-8)

## பிற்போடப்பட்டுள்ளது

உயரப்புலம் ஆனைக்கோட்டை ஐ. ச. ச. நிலையத்தினால் அதன் வளர்ச்சி நிதிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தின் நிமித்தம் குறிப்பிட்ட திகதியில் (31—05—99) நடத்த முடியாமல் போனதற்கு மனம் வருந்துகின்றோம். இதன் சீட்டிழுப்பு திகதி பின் அறிவிக்கப்பட்டு அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

(66277) — நிர்வாகம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 — 10 — 1927 | 04 — 05 — 1999 |

## திருமதி
## பொன்னையா வள்ளிப்பிள்ளை

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் மூழ்க வைத்து மீளாத்துயில் கொண்டு சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தாயாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றியோருக்கும் மற்றும் சகலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (03- 06- 1999) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அந்தியேட்டி வைபவத்திலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்

வேம்போடுகேணி,
பளை.

(சி/7751)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய விமானங்கள் காட்கிலில் பெரும் தாக்குதலை ஆரம்பித்தன

## 500 க்கு மேற்பட்ட ஊடுருவல்காரர் பலி எனத் தகவல்

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தின் காட்கில் மாவட்டத்தில் இந்திய இராணுவத்தினர் விமானப்படையினரின் உதவியுடன் நேற்று ஆரம்பித்துள்ள பெருந்தாக்குதலில் 500–க்கு மேற்பட்ட ஊடுருவல் காரர்கள் கொல்லப்பட்டிருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சீரற்ற கால நிலை காரணமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் தாக்குதல் மீண்டும் நேற்று அதிகாலை ஆரம்பிக்கப்பட்டன.

ஊடுருவல் காரர்கள் ஊடுருவியுள்ள காட்கில் ராஷ் முஸ்ஹோ, பட்டாளி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 500-க்கு மேற்பட்ட ஊடுருவல்காரர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

ராஷ் பட்டாளி பிரிவுகளில் இருந்து ஊடுருவல்காரர்களை முற்றாக வெளியேற்றி இந்திப் படைகள் அங்கு நிலைகொண்டுள்ளதாகவும்—

காட்கில் முஸ்ஹோ பகுதிகளை நோக்கி இந்தியப் படையினர் முன்னேறுவதாகவும்—

படையினரின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் ஊடுருவல்காரர்கள் ஓடுவதாகவும்—

ஓடும் ஊடுருவல் காரரை படையினர் உன்னிப்பாகக் கவனிப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

ஊடுருவல் காரரைத் துரத்தும் பணி ஓரிரு தினங்களில் முடிவடையும் என எதிர்பார்ப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

## காஷ்மீர் மீதான தாக்குதலை நிறுத்த இந்தியாவை பாகிஸ்தான் கோரும்

### பாக் அமைச்சர் டில்லி வருகிறார்

இஸ்லாமபாத், ஜூன் 2

ஜம்மு-காஷ்மீரில் ஆரம்பித்துள்ள தாக்குதல் நடவடிக்கையை உடன் நிறுத்துமாறு இந்தியாவைப் பாகிஸ்தான் கோரவுள்ளது.

ஓரிரு தினங்களில் இந்தியா செல்லும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சர்தாஜ் அஸீஸ் மேற்கண்ட கோரிக்கையை இந்திய அதிகாரிகளிடம் விடுக்கவிருப்பதாகப் பாகிஸ்தான் அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என்றும்—

யுத்தம் இதற்குத் தீர்வு இல்லை என்றும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

அதே நேரம்— காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஜம்மு-காஷ்மீர் நிலைமை குறித்து பிரதமர் வாஜ்பாயுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடினார். [இ-3]

## மத்தியஸ்தம் வகிக்க ஈரான் தயார்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் காஷ்மீரில் அண்மையில் ஆரம்பித்த மோதல்களை சமாதானமாகத் தீர்த்து வைப்பதற்கு ஈரான் விருப்பம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில மத்தியஸ்தம் செய்து வைக்கத் தயார் என்றும் ஈரான் அறிவித்துள்ளது.

ஈரானிய சபாநாயகர் அக்பாரே இதனைத் தெரிவித்தார். (இ)

## பாகிஸ்தான் மீது இந்தியா குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூன் 2

ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தில் போர் போன்ற ஒரு நிலைமையையே இந்தியா எதிர்நோக்கியுள்ளது

இவ்வாறு பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை பிரதமரின் இல்லத்தில் இடம்பெற்ற வணிகர் கூட்டத்திலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

ஊடுருவல்காரர்களுக்கு பாகிஸ்தான் இராணுவம் பக்கபலமாக நின்று இந்திய நாட்டு எல்லையை மாற்ற முயல்கின்றது எனவும்—

ஜம்முகாஷ்மீரில் நடந்து கொண்டிருப்பது ஊடுருவல் அல்ல ஒரு வகையான படையெடுப்பு பாகிஸ்தான— இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மாற்றி இந்தியப் பிரதேசத்தின் ஒரு பகுதியை கைப்பற்றும் ஒரு முயற்சி எனவும்—

ஊடுருவல்காரர்களை பாகிஸ்தான் திரும்ப அழைத்துக்கொள்ளாதுவிடின் அவர்களை இந்தியா அடித்து விரட்டும் என்றும் — பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார். (இ-க)

## நேபாளத்தின் புதிய பிரதமர்

நேபாளத்தின் புதிய பிரதமராக கிருஷ்ண பிரசாத் பட்டாரி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

75 வயதுடைய பட்டாரி இரண்டாவது தடவையாக நேபாளத்தின் பிரதமர் பதவியை ஏற்கின்றார். (இ-க)

## ஒப்பந்தங்கள், சட்டங்கள் நைஜீரியாவில் ரத்து

### புதிய அரசு நடவடிக்கை

லாகோஸ், ஜூன் 2

நைஜீரியாவில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டு வந்த ஒப்பந்தங்கள், சட்டங்கள் மற்றும் அங்கீகாரங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நைஜீரியாவின் புதிய ஜனாதிபதியான ஒலுசெகுன் ஒபசன்யோவின் பணிப்பின் பேரிலேயே இவை இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

15 ஆண்டுகால இராணுவ ஆட்சியின் பின்னர் ஜனநாயக ஆட்சி நைஜீரியாவில் கொண்டு வரபபட்டுள்ளது. இதன் முதல் கட்டமாகவே இந்த நடவடிக்கை என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

எனினும் நீதித்துறைக்கு மட்டும் இந்த இரத்து பொருந்தாது என்று ஒபசன்யோ அறிவித்துள்ளார். (இ-க)

## கொலம்பியாவில் கடத்தப்பட்டோரில் 24 பேர் விடுதலை

லண்டன், ஜூன் 2

கொலம்பியாக் கெரில்லாக்களால் கடத்திச் செல்லப்பட்டவர்களில் 24 பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

கொலம்பியாவில் உள்ள தேவாலயம் ஒன்றில் ஞாயிறு திருப்பலியில் பங்கு கொண்டவர்களில் 45 பேரை கெரில்லாக்கள் ஆயுதமுனையில் கடத்தியிருந்தனர்.

இவர்களில் 24 பேரையே கெரில்லாக்கள் விடுதலை செய்திருந்தனர்.

விடுதலை செய்யப்பட்டவர்கள் குழந்தைகளும், வயோதிப பெண்களும் ஆவர்.

மேலும் கெரில்லாக்கள் 60 பேர் வரையானோரை பிணைக் கைதிகளாக வைத்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கெரில்லாக் குழுவுடன் கொலம்பிய அரசு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாகவே இவ்வாறான கடத்தல் நடவடிக்கைகள் தங்களால் மேற்கொள்ளப்படுவதாக கெரில்லாக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-க]

## கிளர்ச்சித் தலைவரை விடுவிக்க சியராலியோன் அரசு இணக்கம்

பிரீரவுண். ஜூன் 2

சியராலியோன் கிளர்ச்சித் தலைவர் பொடோ சன்கோவை விடுதலை செய்வதற்கு சியராலியோன் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

சியராலியோனில் எட்டு வருட காலமாக இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முகமாக அரசுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே தீவிரமான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பேச்சு வார்த்தைகளின்போது கிளர்ச்சிக்காரர்கள் தமது தலைவரை விடுதலை செய்யவேண்டும் எனக் கோரியிருந்தனர். இதனை அடுத்தே அரசு கிளர்ச்சித் தலைவரை விடுதலை செய்ய இணக்கம் தெரிவித்தது

கடந்த ஒக்ரோபர் மாதம் அரசுக்கு எதிராகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் பெடோ சன்கோவுக்குச் சியராலியோன் அரசு மரணதண்டனை விதித்தமை குறிப்பிடத்தக்கது (இ-க)

### உலக அரங்கில்

## ஜெயலலிதா நீதிமன்றில் குற்றப்பத்திரம் பெற்றார்

சென்னை ஜூன் 2

டான்சி ஊழல் வழக்கின் குற்றப்பத்திரங்களின் நகல்களை அ. தி மு. க செயலாளர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா நடராஜன் மற்றும் வேறு நான்கு பேர் நேற்று முன்தினம் நீதி மன்றில் நேரில் சென்று பெற்றுக் கொண்டனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்களுள் ஒருவரான தமிழ் நாட்டின் முன்னான் அமைச்சர் முகமது அஸீஸ் சுகயீனம் காரணமாக "ஸ்ரெச்சர்" இல் நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டார்.

அஸீஸின் உடல் நிலையை பரிசோதிக்குமாறு சென்னை பொது மருத்துவமனை அதிகாரிக்கு இந்த வழக்கை விசாரித்து வரும் நீதிபதி அன்பழகன் உத்தரவிட்டார்.

கடந்த 25 ஆம் திகதி இந்த வழக்கு தொடர்பாக இவர்களை நீதிமன்றில் ஆஜராகும்படி பணிக்கப்பட்டிருந்த போது ஜெயலலிதா நீரிழிவு மற்றும் உயர் அழுத்த நோய்க்குச் சிகிச்சை பெற்றுவருவதாகவும்—

இதனால் ஒரு வார காலம் ஓய்வு எடுக்க வேண்டும் எனவும் — தெரிவித்து மருத்துவ அறிக்கையை நீதிமன்றத்துக்கு அனுப்பி இருந்தனர்.

இதனை அடுத்தே, நேற்று முன்தினத்துக்கு தவணை போடப்பட்டது. (இ-க)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1999

| திகதி | மைதானம் | பங்குபற்றும் அணிகள் |
|---|---|---|
| 4 - 6 - 99 | ஓவல் | இந்தியா எதிர் ஆஸ்திரேலியா |
| 5 - 6 - 99 | டெரன்ட் பிறிட்ஜ் | தென் ஆபிரிக்கா எதிர் பாகிஸ்தான் |
| 6 - 6 - 99 | ஹெடிங்லி | சிம்பாப்வே எதிர் நியூசிலாந்து |
| 8 - 6 - 99 | ஓல்ட் ட்ராபோட் | இந்தியா எதிர் பாகிஸ்தான் |
| 9 - 6 - 99 | லோட்ஸ் | சிம்பாப்வே எதிர் ஆஸ்திரேலியா |
| 10 - 6 - 99 | எட்பஸ்டன் | தென் ஆபிரிக்கா எதிர் நியூசிலாந்து |
| 11 - 6 - 99 | ஓவல் | சிம்பாப்வே எதிர் பாகிஸ்தான் |
| 12 - 6 - 99 | டெரன்ட் பிறிட்ஜ் | இந்தியா எதிர் நியூசிலாந்து |
| 13 - 6 - 99 | ஹெடிங்லி | தென் ஆபிரிக்கா எதிர் ஆஸ்திரேலியா |
| | | அரை இறுதிகள் |
| 16 - 6 - 99 | ஓல்ட் ட்ராபோட் | சூப்பர் சிக்ஸில் முதல் இடம்பெறும் அணி எதிர் 4ஆவதாக வரும் அணி |
| 17 - 6 - 99 | எட்பஸ்டன் | சூப்பர் சிக்ஸில் 2-வது இடம்பெறும் அணி எதிர் 3ஆவதாக வரும் அணி |
| | | இறுதிப் போட்டி |
| 20 - 6 - 99 | லோட்ஸ் | அரை இறுதிப் போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகள் |

## சுரங்க நடைபாதை நெரிசலில் 54 பேர் பலி

மின்ஸ், ஜூன் 2

பெலறஸ்சின் தலைநகரின் சுரங்கநடைபாதையில் கடந்த ஞாயிறு ஏற்பட்ட நெரிசலில் 54 பேர்வரை இறந்துள்ளனர். 100 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மிர் வானொலி நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவுதின இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திரும்பிக் கொண்டிருந்த 2 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் திடீரெனப் பெய்த மழையில் இருந்து தப்புவதற்காக சுரங்க வழிப்பாதையில் முண்டியடித்துச் சென்ற போது ஏற்பட்ட நெரிசலே இந்தச் சம்பவம் இடம்பெறக் காரணமாயிற்று

இறந்தவர்களில் பெரும்பாலானோர் 13 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களாவர். [இ-க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

விஸ்வலிங்கம் அனுசியா என்பவரது தேசிய அடையாள அட்டையும் (74620350V), விசேட அடையாள அட்டையும் (091007044) உடுவிலுக்கும் மானிப்பாய்க்கும் இடையில் 20-05-99 வியாழக்கிழமை தவறிவிட்டன. இவற்றைக் கண்டு எடுத்தவர்கள தயவு செய்து உடுவிலுள்ள தயாகரன் பேக்கரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(66251)

அராலி வடக்கு வட்டுக் கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி சகுந்தலா என்பவரது தேசிய அடையாள அட்டை [807701541V] யும், விசேட அடையாள அட்டை [090401042] யும், 20.5.99 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

[66244]

முருகையாயோகராஜ்என்பவருடைய தேசிய அடையாள அட்டை(இல. 770454662V), விசேட அடையாள அட்டை (0903031403) என்பன பலாலி வீதியில் (திருநெல்வேலிக்கு அருகில்) 21-05-99 அன்று தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் கோப்பாய் தெற்கு கிராம அலுவலரிடம் அல்லது பரமேஸ்வராச்சந்தி, விஷ்ணுபவன் தேநீர்ச்சாலை உரிமையாளரிடம் ஒப்படைக்கவும்.

(66243)

### மணமகன் தேவை

இந்து சைவ போசனமுள்ள 8 இல் செவ்வாய் உடைய ஒரேபெண்ணுக்கு பெற்றோர் தகுந்தவரனை எதிர்பார்க்கின்றனர். வயது 26, கல்வித் தகைமை, குறிப்பு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். மே/பா விளம்பர இல. 889, உதயன்.

(66256)

### நாற்றுக்கள்

நல்ல இன கத்தரி நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அறவழிப் போராட்டக்குழு, கண்டி சாலை, கைதடி நுணாவில், சாவகச்சேரி.

(66246)

### விற்பனைக்கு

இரண்டு டீபிறிசர் குளிர் சாதனப் பெட்டிகளும் இரண்டு சாதாரண குளிர் சாதனப் பெட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. பொன்னுத்துரை (ஆசிரியர்), ஆஸ்பத்திரி முன்வீதி, சாவகச்சேரி.

(சி/7739)

### இறைச்சிக் கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் (பாதிக்கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம், மிக நுட்பமான நிறுவை. அதுடன் அடைமுட்டையும். வாழைக்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(66248)

## இறைச்சிகோழி

31-5-99 இல் உதயன் சிறு விளம்பரப் பகுதியில் பிரசுரமான இறைச்சிக் கோழி kg 120 ரூபா] என்ற விளம்பரம் 40, கோயில்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியாளரால் கொடுக்கப்படவில்லை என்பதை சகலவாடிக்கையாளருக்கும் அறியத் தருகின்றோம்.

1kg-160 ரூபா.

வே. இமானுவேல்.
40, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்

(66261)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேசசபை உபதலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் நல்லூர் பிரதேச பொறுப்பாளருமான

### தியாகராஜா ராஜ்குமார்

அவர்கள் அகாலமரணமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர்,
உறுப்பினர்கள், ஊழியர்கள்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

(66262)

## வரணி சுட்டிபுர அம்மன் ஆலய 3 ஆம் திருவிழா

இன்று காலை 10.00 மணி தொடக்கம்
**மேளக்கச்சேரி**
பகல் 1.30 மணிக்கு **ராகம்ஸ்**
இசைக் குழுவினரின் இன்னிசைக் கானங்கள் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மூன்றாம் திருவிழா உபயகாரர்.

விளம்பர அன்பளிப்பு:

**அம்பிகா ஸ்ரோர்**
புத்தூர் சந்தி, மீசாலை.

**அம்பிகா கிறீம் கவுஸ்**
புத்தூர் சந்தி, மீசாலை.

(66269)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## விவாக மங்கள அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் (1999 - 06 - 03) வியாழக்கிழமை உத்தராடம் நட்சத்திரமும். சதுர்த்தி திதி சித்தயோகமும் கூடிய சுப நன்னாளில் மு. ப. 11-45 மணி தொடக்கம் 12 45 மணி வரையுள்ள சிங்கலக்கின சுப முகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**மகேந்திரராஜா**
(உரிமையாளர் சாந்தலிங்கப் பத்தர் நகையகம் உடுவில்)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**பிரியதர்ஷினி**
அவர்களுக்கும்

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மண மக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம்:- 1999-6-4 வெள்ளிக்கிழமை மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு திருமதி தங்கரட்ணம் தம்பதிகள்
"ஜோதி வாசா"
மான் பாடசாலை வீதி,
உடுவில்.

திரு. திருமதி சுரேந்திரரட்ணம் தம்பதிகள்
இமையாணன்
சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(இரு வீட்டார் அழைப்பு) (66265)

## கண்ணீர் அஞ்சலி

### சீ. க. அமிர்தரஞ்சன்

[பாதுகாப்பு சாஜன் (Security Sergeant)
சிமெந்துக் கூட்டுத்தாபனம்]

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தி பெறவும் பிரார்த்திக்கின்றோம்.

1970 ஆம் ஆண்டு இணைந்த
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

(சி/7744)

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### முத்தையா தையல்நாயகி

அளவெட்டி வடக்கு கலப்பனா ஒடையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி முத்தையா தையல்நாயகி 31-05-1999 திங்கட்கிழமை கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்தையாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மு. சிவராஜா [முன்னாள் அதிபர் வீமன் காமம் மகா வித்தியாலயம்], காலஞ்சென்ற மு. இராசரத்தினம் மற்றும் மு. தயாபரன் [கொழும்பு] ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. சுந்தரலிங்கம் [கொழும்பு], சி மீனாட்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சி இரதிதேவி [ஆஸ்திரேலியா] இ சாவித்திரி [மல்லாவி], த. இராஜகுமாரி [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியாரும், சி. யாதவன், சி. சாயினி, இ. சுகந்தினி, இ கஜேந்திரன், இ. கோமதி, த. மிஷாங்கன், த. சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள்இன்று 02-06-1999 புதன்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
திருமதி நடராஜா மீனாட்சியம்மா
[சகோதரி]

'சக்திஅகம்',
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

[66260]

### திருமதி தம்பாபிள்ளை அம்மிணிப்பிள்ளை

சேர்ச் லேன் நுணாவில் மேற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தம்பாபிள்ளை அம்மிணிப்பிள்ளை 30-5-99 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆசிரியர் தம்பாபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் சகோதரியும், திருமதி செ.சிவபாக்கியம் [கனடா], திருமதி நா. தவமணி [கனடா], பத்மநாதன் [பட்டயக் கணக்காளர், ஆஸ்திரேலியா], திருமதி த. அற்புதமணி [வெள்ளவத்தை], யோகநாதன் [ஆஸ்திரேலியா] லோகநாதன் [ஆஸ்திரேலியா], திருமதி தி. சிவசோதி [ஆசிரியை, நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை] ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ் சென்றவர்களான த. செல்வவிநாயகம், க. நாகேந்திரம், க. தங்கவடிவேலு மற்றும் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் திருமதி ப. சரோஜினி, திருமதி யோ. தர்மதேவி, திருமதி லோ. தயானி மற்றும் நா. தியாகராசா [பிரதேச செயலகம் சாவகச்சேரி] ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற நா. தவேந்திரன் மற்றும் திருமதி சிவபாலன் இந்திரமணி [ஆஸ்திரேலியா], நா. சுபேந்திரன் [லண்டன்], திருமதி குமார் இந்திரமதி [ஆஸ்திரேலியா], நா. பாலேந்திரன் [டென்மார்க்], திருமதி நிமால் இந்திரஜோதி [கனடா], செ. செல்வேந்திரன் [பிரான்ஸ்], திருமதி திலகன் செல்வநிதி [கொழும்பு], செ. செல்வநேசன் [லண்டன்], திருமதி சுதா சியாநிதி [கனடா], திருமதி சிவகுமார் லோஜினி [கொழும்பு], த. அகிலன் [கனடா], செல்வி த. ரமணி [கொழும்பு], தி. பார்த்தீபன் [வவுனியா], தி. இளங்கோ [வவுனியா] மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ப. தம்பா, திருமதி ஐ. அமணி ப. கனா, யோ. தர்சினி, யோ. திருவூரன், லோ. லோஜிகா, லோ. தர்மிலன் ஆகியோரின் பேர்த்தியும் மிருநாளினி, அனந்தன், நர்மதா, சாருலதா, சுகன்யா, மிதுலா, தாரிணி, ரமணன், துவாரகா, விஜுஜா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

இவரது பூதவுடல் பொரளை A. F. றேமன்ட் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று [2 6 99] மாலை 4 மணிக்கு தகனக்கிரியைக்காக கனத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

திரு. திருமதி திலகன் செல்வநிதி
45, விவேகானந்தா வீதி,
கொழும்பு - 6

திரு. திருமதி தியாகராசா சிவசோதி
K.M வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

[சி/7745]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. தே. க. வாங்கிய ஆயுதங்கள் மிக விரைவில் மக்கள் பார்வைக்கு

## அனுருத்த கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 2

ஐ. தே. க. அரசினால் யுத்தத்துக்கென கொள்வனவு செய்யப்பட்ட பாவனைக்கு உதவாத ஆயுதங்கள், யுத்த டாங்கிகள் மற்றும் யுத்த உபகரணங்கள் ஆகியவை விரைவில் மக்கள் பார்வைக்காக வைக்கப்படும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இந்த தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிக்கையில் கூறியதாவது:

பாவனைக்கு உதவாத யுத்த உபகரணங்கள் வடக்கில் எட்டு ஏக்கர் நிலத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

ஐ. தே. க. யுத்தம் நடத்தாது பிரபாகரனுக்கு நாட்டை பிரித்துக் கொடுத்து ஈழத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தது.

ஐ. தே. க 13 வருடங்களாக நடத்தி வந்த யுத்தத்துக்காக கோடிக்கணக்கில் பணத்தை விரையம் செய்தது. ஆனால் அது வாங்கிய ஆயுதங்கள் பாவனைக்கு உதவாதவை என்றார். (இ-ரி)

## 1,135 குடும்பங்களுக்கு 1 ஆம் கட்டக் கொடுப்பனவு

வலி. கிழக்கு, ஜூன் 2

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடந்தகால வன்செயல்களினால் அசையும் அசையாச் சொத்துக்களை இழந்த குடும்பங்களுக்கான முதலாம் கட்ட 5 ஆயிரம் ரூபா இழப்பீட்டுத்தொகை இதுவரை 1.135 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்ட இழப்பீட்டுத் தொகையான 8 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்காக முன்னுரிமை அடிப்படையில் 188 குடும்பங்களின் பெயர்ப்பட்டியல் பிரதேச செயலகத்தினால் யாழ் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி கிடைத்ததும் இந்த இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-180)

## பொன்விழா

வலி. கிழக்கு ஜூன் 2

அச்சுவேலி தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா சன சமூக நிலைய பொன்விழாவை முன்னிட்டு எதிர்வரும் 6ஆம் திகதி மின்ஒளியில், கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதே வேளை அன்றைய தினம் காலை மூன்று மைல் மரதன் ஓட்டப் போட்டிகளும் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (இ - 180)

## மோட்டர் திருட்டு

வலி. மேற்கு, ஜூன் 2

வட்டுக்கோட்டை பிலவத்தையில் உள்ள வீடொன்றில் வீட்டுக்காரர் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது மோட்டர் ஒன்று திருடப்பட்டது.

வீட்டு உரிமையாளர் பக்கத்திலுள்ள ஆலயமொன்றுக்கு சென்று இளைக்கட்டியதைத் தொடர்ந்து இரண்டு நாள்களின் பின்னர் அவர்களுடைய வீட்டுக்குச் செல்லும் சிறிய ஒழுங்கையில் மோட்டர் கொண்டு வந்து போடப் பட்டிருந்தது. (இ-175)

## மதுசார வடிசாலை இயங்குகிறது

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தென்மராட்சி கொத்தணியினரால் கைதடியில் ஆரம்பிக்கப்பட்ட மதுசார வடிசாலை இயங்க ஆரம்பித்துள்ளது.

தினமும் நாலாயிரம் போத்தல் கள் கொடிகாமம், பனை ஆகிய சங்கங்களினால் வழங்கப்படுகிறது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் கொடிகாமம் சங்கமும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் பனைச்சங்கமும் வடிசாலைக்கு கள் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## தீவக கல்வி வலயத்தில் வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

தீவக கல்வி வலயத்தில் சில பதவி நிலை வெற்றிடங்களை நிரப்புவதற்கு தீவக கல்வி வலயத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

கலாசார இணைப்பாளர், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர் நெடுந்தீவு, உதவிக்கல்விப் பணிப்பாளர் ஊர்காவற்றுறை —

மற்றும் உடற்கல்வி, ஆங்கிலம், தமிழ்மொழி, விஞ்ஞானம், கணிதம், சமூகக் கல்வி, சித்திரம், சைவநெறி, றோ. க., ஆரம்பக்கல்வி, சங்கீதம், வாழ்க்கைத்தேர்ச்சி ஆகிய பாடங்களுக்கான முதன்மை ஆசிரியர்கள் போன்றவற்றுக்கான வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளன. (இ-ரி)

## உள்ளக தொலைபேசி வசதி

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் உள்ளகத் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

கல்விப் பணிப்பாளர் நிர்வாக அலுவலர், நிதியுதவியாளர், கணக்காளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோருக்கு மாநாட்டு மண்டபம், ஆசிரியர் கிளை, திட்டமிடல் பிரிவு, ஆவணக்காப்பகம், ஆரம்பப்பிரிவு ஆகியவற்றுக்குமே இவ்வாறு உள்ளகத் தொலைபேசி இணைப்புக்கள் கடந்தவாரம் முதல் வழங்கப்பட்டுள்ளன. (இ-7)

## கிரிக்கெட் வீரர் அரவிந்த டி சில்வாவின் ஹோட்டலில்பணம்சூறை!

கொழும்பு, ஜூன் 2

இலங்கை கிரிக்கெட் அணியின் உப-தலைவர் அரவிந்த டி சில்வாவுக்குச் சொந்தமான ஹோட்டல் ஒன்று நேற்று முன்தினம் இனந் தெரியாதோரால் சூறையாடப்பட்டது.

கொழும்பில் உள்ள இந்த ஹோட்டலினுள் திடீரென புகுந்த கோஷ்டி ஒன்று அங்கிருந்த உடைமைகளை அடித்துச் சேதப்படுத்திவிட்டு ஹோட்டலில் இருந்த 2 இலட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இந்தியாவில் இருந்து அழைக்கப்பட்ட சமையற்காரர்களைக் கொண்டு இந்திய உணவு வகைகள் இந்த ஹோட்டலில் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு வந்தன.

இச் சம்பவம் தொடர்பாக பொலீஸார் தீவிரவிசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். [ஐ-6]

## சிரமதானம் மூலம் வீதி திருத்தம்

வேலணை, ஜூன் 2

நயினாதீவு ஆலங்குளவீதி சிரமதானம் மூலமாக சென்றவாரம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வீதியில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட 200 மீற்றர் தூரமான பகுதியே புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகப் பொறுப்பதிகாரியின் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானப் பணியில் அலுவலக ஊழியர்களும், நயினாதீவு மகா வித்தியாலய சாரண மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். [ஐ-167]

## தமிழ்மொழி நாள் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்று முடிந்த 'தமிழ் மொழிநாள்' போட்டிகளில் இரண்டு நிகழ்ச்சிகள் மீண்டும் நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நடனம் (பிரிவு — 5), நடனம் (திறந்த போட்டி) ஆகியனவே இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளன [இ-7]

## தேடுதல்

நவாலி, ஜூன் 2

சங்கரத்தை, துணவி, மாவடி, வட்டுக்கோட்டையின் சில பகுதிகள் நேற்றுக் காலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. [இ-100]

## கூடைப் பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை 'உதயன்' நிறுவன அனுசரணையுடன் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை நடைபெறும் ஆண்கள் பிரிவு ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 4.00 மணி — ஓல்ட் கோல்ட்ஸ் வி.க. அணி எதிர் ஜொலிஸ்ரார் வி.க. அணி.

பிற்பகல் 5.00 மணி — பல்கலைக்கழக அணி எதிர் பற்றீசியன் வி.க. அணி. (க)

# செய்திக் கொத்து

### ஓய்வூதியவவுச்சர்கள் வங்கிகளுக்கு

நவாலி, ஜூன் 2

பர்மா, சிங்கப்பூர், மலேசியா ஓய்வூதியம் பெறுபவர்களின் மே மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-100)

### பதிவு

தென்மராட்சி ஜூன் 2

மந்துவில் கிழக்கு, பாலர் பகல் பராமரிப்பு இல்லம் வடக்கு—கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வலிந்துதவு சமூக சேவைகள் ஒழுங்கமைப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது

தென்மராட்சிப் பிரதேசத்தில் வலிந்துதவு நிறுவனம் ஒன்று அரசினால் பதிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவை ஆகும். (க-117)

### திருநிலைப்படுத்தல்

கொழும்புத்துறை, ஜூன்2

இளவாலைப் பங்கைச் சேர்ந்த அருட்திரு. சகோசரர் டேவிட் இம்மானுவேல் இரட்னராஜ [அ.ம.தி] கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார். (ஐ - 30)

### ச. ச நிலையத்துக்கு நிதி ஒதுக்கீடு

குருநகர், ஜூன்2

சேதமடைந்த நிலையிலுள்ள பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையத்தைத் திருத்தியமைக்க பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது-

யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-51)

### திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 2

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டடம் மற்றும் சரஸ்வதி சிலை என்பவற்றின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை புதிய மாடிக் கட்டடத்தையும், கல்வித் திணைக்கள பொறியியலாளர் கு. சிவபாலன் சரஸ்வதி சிலையையும் திறந்து வைத்தனர். (க)

### உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்

வடமராட்சி, ஜூன் 2

வடமராட்சி கல்வி வலயத்துக்கு நான்கு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர். எம். ஸ்ரீபதி, எஸ். புஸ்பலிங்கம், எஸ். அருண்குமார், எஸ். நந்தகுமார் ஆகியோரே உதவிக்கல்விப்பணிப்பாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர். (க-173)

### கௌரவிப்பு

அரியாலை, ஜூன் 2

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய புனரமைப்பு வேலைகளுக்கு உதவி புரிந்தவர்களான சி. திருநாவுக்கரசு, த. சடாச்சரம் ஆகியோர் அண்மையில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கு. செந்தில்குமரன் தலைமையில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (க - 17)

### கேணி புனரமைப்பு

சாவகச்சேரி, ஜூன் 2

மீசாலை அருள்மிகு திருநீல கண்டவெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக்கேணி சுமார் ஐம்பதினாயிரம் ரூபா செலவில் செப்பனிடப்பட்டு வருகிறது. இத் தீர்த்தக்கேணி பல ஆண்டுகள் பழமைவாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (க - 31)

### பஸ் தரிப்பதில்லை

நல்லூர், ஜூன் 2

சாவகச்சேரிவீதியில் புத்தூர் சந்திக்கு அண்மையில் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையால் அமைக்கப்பட்ட பஸ் தரிப்பில் பஸ்கள் நிறுத்தப் படுவதில்லை எனவும்— இதனால் இந்த பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸுக்காகக் காத்து நிற்போர் தாம் செல்லவேண்டிய இடங்களுக்குச் செல்ல முடியாதிருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. (க-111)

### கிணறு புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

கரம்பைக்குறிச்சி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பொதுக்கிணறு வரணி மதி ஒளி சனசமூக நிலையத்தினரால் 10 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. (க)

### அறநெறிப் பாடசாலை

தென்மராட்சி, ஜூன் 2

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசாமி ஆலயத்துக்கு அருகில் அறநெறிப் பாடசாலை ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலயப் பிரதமகுரு சி. சோமாஸ்கந்தக் குருக்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆசிரியர் துரைச்சாமி தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது. (க-117)

### பாராட்டுவிழா நடத்த முடிவு

தென்மராட்சி, ஜூன் 2

மல்லாகம் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றி இளைப்பாறிய புலவர் மு. திருநாவுக்கரசு அவர்கள் தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொண்ட சமய, சமூக பணிகளுக்காக பிரதேசத்தில் உள்ள இந்து மன்றங்கள் உட்பட பொது அமைப்புகள் ஒன்றிணைந்து பாராட்டிக் கௌரவிக்கவுள்ளன.

இதற்கென அண்மையில் நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் விழாக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழையில் இயங்கும்

# புனர்வாழ்வு முகாமில் 15 இளைஞர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

இராணுவத்தினரிடம் சரணடைந்த 15 தமிழ் இளைஞர்கள் தெல்லிப்பழையில் உள்ள புனர்வாழ்வு முகாமில் தடுத்துவக்கப்பட்டுள்ளனர்.

திங்களன்று இம்முகாமுக்கு விஜயம் செய்த மனித உரிமைகள ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி செல்வி கௌரிசுந்தரலிங்கம் மேற்படி இளைஞர்களைப் பார்வையிட்டார்.

இந்த இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்படுவதுடன் சிங்களம் மற்றும் ஆங்கில வகுப்புகளும் நடத்தப்பட்டு வருவதாகவும்—

சனி, ஞாயிறு தினங்களில் உறவினர்கள் இவர்களைச் சென்று பார்வையிடலாம் என்றும்—

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார்.

[ஐ-5-ரி]

# விவசாயக் கருத்தரங்கு

வலி. கிழக்கு, ஜூன் 2

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர்களுக்கான விவசாயக் கருத்தரங்கும், செயல்முறை விளக்கமும் இம்மாதம் 18 ஆம் திகதி முழு நாளாகத் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

விவசாயத் திணைக்களமும் 'கெயர்' நிறுவனமும் நடத்தும் இந்தக் கருத்தரங்கில் விவசாயிகள் உற்பத்திப் பொருள்களைப் பதப்படுத்தலும், பெறுமதியைக் கூட்டலும் போன்ற விடயங்கள் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

(இ-180)

# நிலாப்தீன் கொலைமுயற்சி: மற்றும் ஒருவர் கைது!

கல்கிஸை பயங்கரவாத தடுப்பு பிரிவின் பொலிஸ் அதிகாரி நிலாப்தீனை கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்று சந்தேகிக்கப்படும் மற்றும் ஒருவர் பொலிஸாரினால் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவரான சசிகுமார் என்ற ஜெகன் என்ற நபர் நிலாப்தீன் கொலை முயற்சி நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு இறந்து போன புலி உறுப்பினருக்கு இரகசிய தகவல்களை வழங்கியவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

[இ-ரி]


நல்லூர்

**சயன்ஸ் அக்கடமி**

கணக்கீடு: 2000

அலகு: "இருப்பு மதிப்பீடு"

ஆரம்பம்: 4 - 6 - 99

வெள்ளி 6.20 A.m.

Paper Class: 99

ஆரம்பம்: 3 - 6 - 99

6 20 A.m.

Mr. BALAVASAN

(66263)



## கேள்விப் பத்திரம்

பதிவு செய்யப்பட்ட நாற்று மேடை பராமரிப்பாளர்களிடமிருந்து நல்ல இன ஒட்டுமா மற்றும் பலாக்கட்டை (குறைந்தது $1\frac{1}{2}$ ஆண்டு முதிர்ச்சி) 1000 இள நாற்றுக்கள் வேண்டப்படுகிறது. கூறு விலை ஏனைய விவரங்களுடன் கேள்விப்பத்திரம் ஜூன் மாதம் 8ஆம் திகதி [08—06—1999] பிற்பகல் 4.00 மணிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்;

முகவரி:

**திட்ட முகாமையாளர்,**
**பட்டினிக்கெதிரான நிறுவனம் - A.C.F,**
**இல: 05, நக்கா வீதி, யாழ்ப்பாணம்.**

[நேரடித் தொடர்புகள் வரவேற்கப்படமாட்டாது]

(66119)



## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 05 — 03 — 1919

உதிர்வு 03 — 05 — 1999

**திருமதி பொன்னம்மா காசிலிங்கம்**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்.

உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(66257)



## முதலாண்டு நினைவஞ்சலி



மண்ணில் 29 — 09 — 1930

விண்ணில் 12 — 06 — 1998

திருமதி
**மகேந்திரன் திரவியம்**

அன்னையே! எம்மை இந்த
அவனியில் பிறக்க வைத்தாய்!
எம்முயிர் நிலைக்கு மட்டும்
மறப்போமா உன்நினைவை?

என்றும் உம்மை இதயத்தில் ஏந்தும்
**அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உடன் பிறப்புக்கள்.**

இரத்தின மாளிகை,
பலாலி வீதி,
உரும்பிராய்.

[66176]



## பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

நடத்தும்

# இசை நாடக-நாட்டுக்கூத்து கிராமிய கலைகள் போட்டி 1999

## நமது கலையை நாமே பாதுகாப்போம்!

பாரம்பரிய கலைகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட கழகம், மரபுவழி நாட்டுக்கூத்துக்களின் இசை நாடகங்களின் — கிராமியக் கலை வடிவங்களின் செம்மையை துலங்கும் நோக்குடனும், இதில் ஈடுபடும் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், கலைஞர்களை இனங்காணும் நோக்குடனும், கலைஞர்களைக் கௌரவிக்கும் நோக்குடனும், ஒட்டுமொத்தமாகப் பாரம்பரியக் கலைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் மேற்படி போட்டிகளை நடத்தவிருக்கின்றோம்.

1) ஆட்ட நாட்டுக்கூத்து — நாட்டுக்கூத்து — சிந்து நடைக்கூத்து — இசை நாடகம் என்ற வகையில் ஒவ்வொன்றுக்கும் பின்வருமாறு பரிசுத் திட்டம்.
(1 மணித்தியாலம்)

**1ஆம் பரிசு 5,000/- 2ஆம் பரிசு 3,000/- 3ஆம் பரிசு 1,500/-**
**கௌரவப் பரிசு 1,000/- வீதம் ஆறு பரிசுகள் வழங்கப்படும்.**

2) பாடசாலையிலிருந்து பங்குபற்றுபவர்களுக்கு (45 நிமிடங்கள்)

**1 ஆம் பரிசு 1,500/- 2 ஆம் பரிசு 1,000/- 3 ஆம் பரிசு 750/-**

3) மேடை ஏற்றும் ஊக்குவிப்புச் செலவாக போட்டி இடம்பெறும் இடத்திற்கு 5 மைலுக்குள் இருப்பவர்களுக்கு 1500 ரூபாவும், 5 மைலுக்கும் 10 மைலுக்கும் இடைப்பட்டவர்களுக்கு 2000 ரூபாவும், 10 மைலுக்கு மேலுள்ளவர்களுக்கு 2500 ரூபாவும் வழங்கப்படும்.

4) கிராமிய கலை நிகழ்ச்சிகள் 20 வயதுக்கு உட்பட்டவர்களுக்குப் புறம்பாகவும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வேறாகவும் இடம்பெறும்.
(10 — 12 நிமிடங்கள்)

**கிராமியக் கலைகளாவன:**

1) கரகம் 2) காவடி 3) ஒயிலாட்டம்
4) குதிரையாட்டம் 5) மயிலாட்டம் 6) கிராமிய நடனம்
7) அருவிவெட்டு நடனம் 8) கும்மி - குடமூதல் 9) கோலாட்டம்
10) பொதுவானவை என 10 நிகழ்வுகளுக்கு வேறு வேறான போட்டி நடத்தப்பட்டு 10 நிகழ்வுகளுக்கு தனித்தனியே மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

**1 ஆம் பரிசு 1,500/- 2 ஆம் பரிசு 1,000/- 3 ஆம் பரிசு 750/-**

நாட்டார் பாடல்கள் 3 பிரிவாக நடத்தப்படும்.

11) தாலாட்டு, ஒப்பாரி 12) மருத்துவிச்சி பாடல், குழந்தைப்பாடல்
13) விவசாய தொழிற்பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், மீனவர் பாடல்கள், தெம்மாங்குப் பாடல்கள்

ஒவ்வொரு பிரிவுக்கும் பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படும்.

**1ஆம் பரிசு 1,000- 2ஆம் பரிசு 750/- 3ஆம் பரிசு 500/-**
**கௌரவப் பரிசு 350/- வீதம் 5 பரிசுகள் வழங்கப்படும்.**

கிராமியக் கலையில் பங்குகொள்ளும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் பக்கவாத்தியச் செலவாகவும், பிரயாணச் செலவாகவும் ரூபா 1000 வழங்கப்படும்.

- தனித்தனி அமைப்புக்களோ — கலைமன்றங்களோ — பாடசாலைகளோ — தனிநபர் தயாரித்தோ போட்டியில் பங்கு கொள்ளலாம்.
- வயதுக் கட்டுப்பாடு இல்லை.
- **போட்டி விண்ணப்ப முடிவு திகதி: 30 — 06 — 1999**
- போட்டியில் பங்குபற்றுபவர்கள் கழகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தையும் போட்டி விதிகளையும் பெற்றுப்பூர்த்தி செய்து,

**திரு. செ. மெற்றாஸ்மயில்**
செயலாளர்
**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்**
12/1, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தோ அல்லது நேரடியாகக் கையளித்தோ விண்ணப்பிக்கலாம்.

**போட்டி நடத்தப்படும் இடம்: யாழ்ப்பாணம்**

கூடுதலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின் பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையேயும் போட்டிகள் நடத்தப்படலாம்.

மேற்படி விண்ணப்பப் பத்திரங்களையும், போட்டி விதிகளையும, இல: 4A ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பங்குகொள்ளும் சிறந்த நிகழ்வின் அண்ணாவிமார்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

**செ. மெற்றாஸ்மயில்**
செயலாளர்
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உகந்த வழி

இலங்கையில் சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் மோதலில் அன்றாடம் சித்திரவதைச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன— என்று சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

சித்திரவதைகளைத் தடுப்பதற்கு ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதை வரவேற்றிருக்கும் மன்னிப்புச் சபை, சித்திரவதை செய்யும் பொலீஸ், இராணுவ உத்தியோகத்தர்கள் மீது மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

சித்திரவதை என்பது கொலைக்கு அடுத்த பாரதூரமான குற்றமாகும். அதனை யார் செய்தாலும், எந்தத் தரப்பினர் செய்தாலும், கண்டிக்கப்பட வேண்டியதே. அதுமிகவும் உச்ச நிலை மனித உரிமை மீறலுமாகும். ஒருவனைச் சித்திரவதை செய்வதற்கு அடுத்தவருக்கு எந்த வகையிலும் தோரணையிலும் உரிமை இல்லை.

தன்னிடம் ஆயுதம் இருக்கிறது என்ற துணிவில் அடுத்தவரைச் சித்திரவதை செய்யும் கொடூர மனம் ஒருவனுக்கு வந்து விடுகிறது. அதனால் ஆயுதப் படைகளும், ஆயுதக்குழுக்களும் சித்திரவதையை ஒரு கொடுமையாக, குற்றமாகக் கருதுவதில்லை, தமது நோக்கங்களை எய்துவதற்கான ஆயுதமாகவே கொள்கின்றன.

போர்க் காலத்தில் அல்லது போர்க்கால சூழ்நிலையில் அப்பாவிகள் இருதரப்பினராலும் சித்திரவதைக்கு ஆளாவது சர்வசாதாரணமாகி விட்டது. இலங்கையிலும் அந் நிலையே பெருமளவில் நிலவுகிறது.

1998 மே மாதத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் கூட்டத்தில் பங்குபற்றிய இலங்கை அரசின் பிரதிநிதி குழுவின் முடிவுகளை இங்கும் நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் அவ்வாறு செய்யவில்லை என்றும் மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டியிருக்கிறது.

ஐ. நா. குழுவின் முடிவுகளை இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறதோ இல்லையோ, போர் முடிவுக்கு வந்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டு நிரந்தர அமைதியும், சமாதானமும் உருவாகினால் மட்டுமே, பெருகியுள்ள மனித சித்திரவதைச் சம்பவங்கள் குறையும்.

ஆகையால் மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச அமைப்புக்கள் போரை முடிவுக்குக் கொண்டுவந்து இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் கண்டு நீதியுடனான சமாதானத்தை உருவாக்கவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும் சக்தியுள்ள நாடுகளின் அரசுகள் ஊடாக நேரடியான, வலுவான அழுத்தங்களைப் போடவும் செயற்படவேண்டும். அந்தவழியே சிறந்தது!

# இந்துமத குருமாராகப் பயிற்சி பெற 16 அந்தண இளைஞர் இந்தியாவுக்கு

## காஞ்சியில் 5 வருடகாலப் பயிற்சி பெறுவர்

இலங்கையில் உள்ள இந்து மத குருமார்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றினை ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடம் ஒழுங்கு செய்துள்ளது.

சுமார் மூன்று வருடங்கள் முதல் ஐந்து வருடங்கள் வரை காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள வேதாகம பாடசாலையில் இவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

வேதம், ஆகமம், சமஸ்கிருதம் மற்றும் கிரியை முறைகள், சோதிடம், பண், ஆங்கிலம் வைதிகம், தமிழ் ஆகியவற்றில் இவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும்.

மேற்படி திட்டத்தில் இணைந்து பயிற்சி பெறுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து 16 அந்தண இளைஞர்கள் இன்று ஜூன் மாதம் 2 ஆம் திகதி இந்தியா பயணமாகின்றனர்.

இலங்கை இந்து மத குருமார் ஒன்றியம் இதற்கான ஏற்பாட்டினை செய்துள்ளது. அதன் நிர்வாக உறுப்பினர்களும், வித்துவ சபையினரும் இணைந்து பயிற்சிபெறத் தகுதியான அந்தணச் சிறார்களை தெரிவு செய்தனர்.

ஜூன் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாக உள்ள பயிற்சித் திட்ட வகுப்பில் இம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர்.

அந்தணப் பிள்ளைகளுக்கு தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றில் இது வரை போதிய பயிற்சிகள் வழங்கப்படவில்லை. திறமை மிக்க இந்து குருமார்களில் பலரும் தமிழ், சமஸ்கிருத மொழிகளில் மட்டுமே திறமை பெற்றிருந்தனர்.

வேற்றுமதத்தவர்கள் பயிற்சி நிலையங்கள் அமைத்து சமயத்துறையில் குருமாரைப் பயிற்றுவித்து முதுதத்துவமானி பட்டங்கள் பலவற்றைப் பெறச் செய்துள்ளது போல இந்து மதத்தினர் செயற்படத் தவறிவிட்டனர்.

சமஸ்கிருதம் படிக்கக்கூடிய தகுதியான இடங்களோ - பயிற்சி நிலையங்களோ இங்கு அமைக்கப்படவில்லை.

### இந்தியாவிலிருந்து வந்தனர்

முன்னரெல்லாம் இந்தியாவிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து சமஸ்கிருத அறிவை வளர்த்த சீதாராம சாஸ்திரிகள் நாராயண சாஸ்திரிகள், சுப்பிரமணிய சாஸ்திரிகள் போன்றோரின் மறைவுக்குப் பின் சமஸ்கிருத அறிவை வளர்க்கக் கூடிய பாண்டித்தியம் பெற்ற எவரும் இங்குகாணப் படவில்லை என்றே கூறலாம்.

சமஸ்கிருதம் கற்பித்த சுன்னாகம் பிராசீன பாடசாலை, யாழ். சிவானந்த குருகுலம், சுப்பிரமணிய சாஸ்திரிகள் குருகுலம் போன்றன சிலகாலம் செயற்பட்டன. தற்போது அவை செயலற்று மறைந்து போய் விட்டன.

யாழ். பல்கலைக்கழக வேதாகம பாடசாலை, இணுவில் தர்மசாஸ்தா குருகுலம் என்பன தற்போது சமஸ்கிருதம், கிரியை முறைகள் வேதாத்யானம் என்பவற்றை ஓரளவு பயிற்றுவித்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் அந்தணர்கள், சிவாச்சாரியர்கள் போன்றோருக்கு பற்றாக்குறை நிலவுகிறது. கோயில் கிரியைகள், பூசைகள் கஷ்டமான சூழ்நிலையில் நடைபெற்று வருகின்றன.

அந்தணப் பெற்றோர்களுக்கு தம் பிள்ளைகளை பயிற்றுவிக்க ஆர்வம்இருப்பினும் கோயில் நித்திய, நைமித்திய கடமைகளின் பளுவினால் அவர்களால் அதைச்செய்ய முடிவதில்லை. பிள்ளைகளும் படிக்கும் காலங்களில் தகப்பனாருக்கு கோயில் கிரியைகளுக்கு உதவவேண்டி இருப்பதால் படிப்பில் கவனம் செலுத்தமுடிவதில்லை.

மேலும், கோயில் கிரியைகளில் ஈடுபடுபவர்களுக்குதட்சணையாக தற்போதுபெரும் தொகைகள் வழங்கப்படுகின்றன. பண ருசி கண்ட இளம் சந்ததியினர் படிக்கும் நோக்கத்தைக் குறைத்து பணம் தேடுவதில் குறியாக உள்ளனர்.

எனவேதான் இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம் காஞ்சிகாமகோடி பீடத்திற்கு அந்தணச் சிறுவர்களை அனுப்பி பயிற்றுவித்து சைவத்தையும் தமிழையும் பாதுகாக்கும் சரியான முடிவை எடுத்து முனைப்புடன் செயற்படத்தொடங்கி உள்ளது.

### ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடம்

இந்து மதம் சீரழிந்த நிலையில் காணப்பட்ட போது அதனை செம்மைப் படுத்தவென இந்தியாவில் அமைக்கப்பட்ட ஆறு மடங்களில் ஒன்றுதான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்.

இங்கு எடுக்கப்படும் முடிவை உலகெங்கும் வாழும் இந்து சமய மக்கள் மறுப்பின்றி ஏற்றுக்கொள்கின்றனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)



இந்தியா செல்லும் அந்தண இளைஞர்கள் இணுவில் தர்மசாஸ்தா குருகுலத்தில் முன்பயிற்சி பெற்றனர். குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் பயிற்சி வழங்கும் போது எடுக்கப்பட்ட படம் இது.

**வி. பரிபூரணானந்த சர்மா**
- வலிகாமம் தெற்கு செய்தியாளர் -

### நாளை

வைகாசி 20
வியாழக்கிழமை
திதி: சதுர்த்தி
மாலை 6. 13வரை
நட்சத்திரம்: உத்தராடம்
நள்ளிரவு 12. 39 வரை
சங்கடஹரசதுர்த்திவிரதம்
சுபநேரம்: 7.22-8.52
ராகுகாலம் 1.22 - 2.52
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒருவன் தன் உணர்வுகளை மறைக்கிறான் என்றால் அவனது உணர்வுகளில் ஏதோ தவறு இருக்கிறதென்று பொருள்
- தாட்ஃபார்குட்டே

## வாசகர் திருமுகம்

### அரைகுறைத் திருத்தம் ஏன்?

கோண்டாவில் அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதி பல மாதங்களுக்கு முன்னதாகக் கல் போட்டு தார் ஊற்றி, செப்பனிடப்பட்டது ஆனால் அரைகுறையாகவே வேலை நடைபெற்றது.

இவ்வீதி ஊடாக அன்னங்கைவரை அதாவது உரும்பிராய், இணுவில் கந்தசுவாமி கோயில்—கே.கே. எஸ். வீதிவரையும் பலாலி வீதி பஸ் டிப்போவரையும் செல்லலாம். இவ்வீதி அரைகுறையாக ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையம் வரை செப்பனிடப்பட்டுள்ளது. மிகுதி கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டுள்ளது. அதனால் பெரும்பகுதி குண்டும் குழியுமாகிப் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இவ்வீதியால் போக்குவரத்தும் அதிகரித்துள்ளது. வீதியை அரைகுறையாகச் செப்பனிட்டவர்கள் பல மாதங்களுக்கு முன்பு ஒரு தடவை தார் ஊற்றிச் செப்பனிட்டவர்கள்—இரண்டாவது தடவை தார் ஊற்றவில்லை. இதனால் இவ்வீதி செப்பனிடப்பட்ட இரண்டு பக்கமும் கற்கள் கழன்று வீதி ஒடுங்கிக்கொண்டே போகிறது. இவ்வீதியில் கூடுதலாக மட்டை ஏற்றிச் செல்லும் வண்டில்கள் மற்றும் வாகனங்கள் செல்கின்றன. மழைகாலத்தில் இவ்வீதி ஊடாக இரண்டு அடிக்குமேல் மழைவெள்ளம் தங்கி நந்தாவில் குளக்கரையை அடைகின்றது; ஆகையால் மழைகாலம் தொடங்குவதற்கு முன்னர் இரண்டாவது தடவை தார் ஊற்றி அரைகுறையாக இருக்கும் செப்பனிடப்படாத மிகுதி வீதியையும் செப்பனிட நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இ. தர்மலிங்கம்
கோண்டாவில் வடக்கு.

### அளவையியல் போதிக்க ஆசிரியரை நியமிக்குக

யாழ் நகரின் பிரபல பெண்கள் பாடசாலை உயர்தர வகுப்பு 2001 இல் கலைப்பிரிவுக்கு அளவையியலையும் ஒரு பாடமாக எடுக்கக்கூடியதாக நேரசூசிகை தயாரிக்கப்பட்டது. ஆனால் அளவையியல் கற்பிக்க இப்போது ஆசிரியர் இல்லை என்பதால் இப்பாடம் கற்க விரும்பிய சுமார் எண்பது மாணவிகளையும் வேறு ஒரு பாடத்தை தெரிவுசெய்து கற்கும்படி கல்லூரி அதிபர் வலியுறுத்தியுள்ளார். இப்பாடத்தை கற்க விரும்பும் இவ்வளவு பெரும் எண்ணிக்கையான மாணவிகளையும் இன்னொரு பாடத்தைக் கற்க வற்புறுத்துவது இம்மாணவிகளின் மனோநிலையை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பது அதிபர் அறியாததல்ல. மிகச்சிறிய சில பாடசாலைகளில்கூட இப்பாடத்தைக் கற்பிக்க ஆசிரியர் இருக்கும் பொழுது மேற்படி பெரிய பாடசாலையில் ஓர் ஆசிரியர் இல்லாதிருப்பது வேதனைக்குரியதும், கவலைப்படவேண்டியதுமான விடயமாகும். கல்விப் பகுதியினர் என்ன செய்கிறார்கள்?

இது குறித்து கல்வித் திணைக்களம் பொறுப்புணர்ச்சியோடு செயற்பட்டு இம்மாணவிகளின் எதிர்கால முன்னேற்றத்துக்கு தடையில்லாது உதவிபுரிந்து ஏதுவான கற்கை நெறிகளை பயின்று கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் அப்பாடத்தைப் பயின்று உயர்தர பரீட்சையைத் தோற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தால் மேற்குறிப்பிட்ட மாணவிகள் மட்டுமல்லாமல், அவர்கள் பெற்றோரும் கல்வி அதிகாரிகளுக்கும், அதிபருக்கும் என்றென்றும் கடப்பாடுடையவர்களாக இருப்பர் என்பது திண்ணம்.

கி. செ. நாதன்
(பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர்)
யாழ்ப்பாணம்.

(பாதிக்கப்பட்ட மேலும் மாணவிகள் இருவரிடம் இருந்தும்இத்தகைய கடிதங்கள் கிடைத்துள்ளன)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசு நிறுவுவது மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு

## முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்க யோசனை

கொழும்பு, ஜூன் 2

இலங்கையில ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைகளையும் தேசிய அரசு ஒன்றை நிறுவுவதன் மூலமே தீர்த்துக் கொள்ள முடியும்.

இப்படி முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தெரிவித்தார்.

இத்தகைய தேசிய அரசில் சகல கட்சிகளும் பங்கு பற்றி சிறுபான்மைமக்களுக்கு தீங்கு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:—

கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்றிருந்தால் சகல கட்சிகளினுடைய பிரதிநிதித்துவத்துடனும் நான் தேசிய அரசொன்றை நிறுவியிருப்பேன்.

கட்சி அரசியல் காரணமாக இந்த நாடு இன்று யுத்தம், பொருளாதார நெருக்கடி, தொழிலின்மை போன்ற தேசிய பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளது.

இவற்றைத் தீர்க்கும் முகமாக குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது தேசிய கொள்கையுடன் இந்த நாட்டை ஆட்சி செய்ய வேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் வேண்டுகோளுக்கிணங்க நான் பிரதமராக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்துக்குச் சென்று அனைத்து தமிழர்களும் தீவிரவாதிகளல்லர் என்பதனை இராணுவத்துக்குத் தெளிவு படுத்தினேன். நீங்கள் சண்டை புரிவது தீவிரவாதிகளுடன் அன்றி தமிழர்களுடன் அல்ல என்பதையும் இராணுவத்துக்கு உணர்த்தினேன்.

இலங்கையில் பொருளாதாரம், யுத்தம் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க அரசமைப்பை மறுசீரமைக்க வேண்டும், இன்றுள்ள அரசமைப்பு முறையை சகல கட்சிகளும் ஒன்றுபட்டு மறுசீரமைப்பு செய்து நாட்டுக்கு உகந்த ஆட்சிமுறையை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும்.

இப்படி அவர் தெரிவித்தார்.

(இ-5)

## கலாபூஷணம்

# நால்வருக்கான விருதுகள் யாழ்ப்பாணத்தில்

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் கலாபூஷணம் விருது பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நால்வருக்கான விருதுகள் யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்க ஏற்பாடாகியுள்ளது

கொழும்பில் கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை நடந்த விருது வழங்கும் வைபவத்தில் கலந்து கொள்ளாத லயன்ஸ் திலகநாயகம் போல் எஸ். ஆர். ஞானசுந்தரம், ஏ. ரி. பொன்னுத்துரை, வி. செல்லத்துரை ஆகியோரின் விருதுகளே யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கப்படவிருக்கின்றன.

இந்த நான்கு கலைஞர்களுக்கான விருதுகள் யாழ் அரசஅதிபர் மூலம் யாழ்ப்பாணத்தில்வைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலாசார சமய அலுவல்கள் அமைச்சு மேலதிக செயலாளர் த. தில்லைநடராசா தெரிவித்தார்.

(இ-3)

## தொழிற் சங்கக்குழு

# வடமராட்சி கல்வி வலய பணிப்பாளருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

வடமராட்சி கல்விவலய அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு ஒன்று வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளரை அவரது அலுவலகத்தில் இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

தென்மராட்சி, தீவகவலயங்களில் பணிபுரியும் அதிபர், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அந்தந்த வலயப் பணிப்பாளர்களை விரைவில் சந்தித்துப் பேசவிருப்பதாக சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

(இ-3)

# விஞ்ஞான ஆசிரியர் பயிற்சி நெறிக்கு செல்லவில்லை

வலி.வடக்கு, ஜூன் 2

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐம்பது விஞ்ஞான ஆசிரியர்களுக்கு கொழும்பில் நடைபெறுகின்ற பயிற்சி நெறியில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

நேற்று முதல் கொழும்பு பிளநெட்ரோறியத்தில் இடம்பெறுகின்ற இரண்டு நாள் பயிற்சி வகுப்பில் பங்கு பற்ற ஐம்பது ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும் இவர்களுக்கான போக்குவரத்து அனுமதி உரிய நேரத்தில் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-86)

# சாவகச்சேரிப் பகுதியில் போலியோ சொட்டுமருந்து

தென்மராட்சி, ஜூன் 2

சுகாதாரத் திணைக்களமும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து கடந்த ஆண்டுகளில் இளம்பிள்ளைவாத நோய் தடுப்பு மருந்து வழங்கிய போது அதனைப் பெற்றுக்கொள்ளாத சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இரண்டாம் கட்ட மருந்து நேற்று முதல் வழங்கப்படுகிறது.

நேற்றுமுதல் இம்மாதம் ஏழாம் திகதி வரை (ஞாயிறு தவிர்ந்த) பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோரால் கடந்த மாதம் போலியோ மருந்து வழங்கப்பட்ட நிலையங்களிலும் வீடு வீடாகச் சென்றும் குழந்தைகளுக்கு சொட்டுமருந்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் போலியோ மருந்து வழங்கப்பட்ட போது முன்னர் போலியோ சொட்டுமருந்து பெற்றுக் கொள்ளாத 272 குழந்தைகளுக்கு சொட்டுமருந்து வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

வலிகாமம் தெற்கு, ஜூன் 2

சீடா கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தரம் பதினொன்றில் கல்வி கற்பிக்கும் ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் சனிக்கிழமை காலை நடைபெற உள்ளது.

[இ-152]

# அச்சுவேலி ஆஸ்பத்திரி 2ஆம் கட்ட கட்டடவேலை

## விரைவில் ஆரம்பமாகும்

அச்சுவேலி ஆஸ்பத்திரியில் பல வருட காலமாக பூர்த்தியடையாமல் இருந்த 24 கட்டில் வசதிகளைக் கொண்ட வார்ட்டின் 2 ஆம் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

சுகாதார திணைக்களம் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த ஆஸ்பத்திரியில் பல வருடகாலமாக முதல்கட்ட வேலைகள் மட்டும் முடிந்த நிலையில் ஆஸ்பத்திரி இயங்கி வந்தது.

இரண்டாம் கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்காக சுகாதார திணைக்களத்தினால் கட்டட கூலி கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

[இ-180]

# இந்துமத...

(7 ஆம் பக்கத் தொடர்)

தமிழ், சமஸ்கிருதம், சமயம் வளர்க்கும் இடம் அது. முன் கூறப்பட்ட பல்வேறு பட்டகலைகளும் இங்கு பயிற்றுவிக்கப்படுகின்றன.

ஒழுக்கம், கட்டுப்பாடு நிறைந்த இந்த நிலையம் வேதாகம பாரம்பரியம் அழியாமல், பாதுகாத்து வருகிறது. இருக்கு, யசுர், சாம, அதர்வணம் ஆகிய நால் வேதங்களினதும் நெறிமுறைகள் அழிந்துவிடாமல் வேத ரிஷிகளைக் கொண்டு இங்கு அவற்றில் பயிற்சிகள வழங்கப்படுகின்றன.

ஐந்து வருடப் பயிற்சியை முடித்து வெளியேறும் அந்தணர்களுக்கு "வேதசிவாகம சூடாமணி" என்ற பட்டம் பீடத்தினால் வழங்கப்படுகிறது

பயிற்சி பெறச்செல்லும் யாழ்ப்பாண இளைஞர்களுக்கு மூன்று மாத முன் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இணுவில் தர்மசாஸ்தா குருகுலத்தில் இவர்களுக்கான பயிற்சி குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ நா மகாதேவக் குருக்களினால் வழங்கப்பட்டது.

பயிற்சிக்காகச் செல்ல உள்ள அந்தணர்கள் ஆதீன மரபுகளுக்கமைய அங்கு கல்வி கற்று, தகுந்த அறிவினைப் பெற்று, தாயகம் திரும்ப வேண்டும் ஈழத்தில் சைவமும் தமிழும் மறுமலர்ச்சியடையவும், அந்தணப் பரம்பரையினருக்கு வழிகாட்டிகளாகவும் இருந்து பணியாற்றவும் வேண்டும் என்பதே சைவ மக்களின்பேரவா ஆகும். ★

## தமிழர் ஆசிரியர் சங்க கலந்துரையாடலில்

# அதிபர், ஆசிரியர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இணக்கம்

யாழ்ப்பாணம் வலிகாமம் வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய கலந்துரையாடலின் போது அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இணக்கம் ஏற்பட்டுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக விண்ணப்பம் செய்தால் அவற்றுக்கு தீர்வுகாண முடியும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உறுதி கூறியுள்ளனர்.

கீழ்காணும் பிரச்சினைகள் தொடர்பான விவரங்களை கல்விப்பணிப்பாளருக்கு அனுப்புமாறு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

★ ஒய்வு பெற்ற அதிபர்கள, ஆசிரியர்களில் இதுவரை ஒய்வூதியம் கிடைக்காதவர்கள்.

★ இதுவரை விதவைகள், அனாதைகள் ஒய்வூதிய இலக்கம் கிடைக்காதவர்கள்.

★ இதுவரை ஆசிரிய பதிவிலக்கம் கிடைக்காதவர்கள்.

★ தொலைக்கல்வி பயிற்சியை முடித்து சான்றிதழைப் பெற்றுக் கொண்டவர்களில் ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படாதோர்.

★ ஆசிரிய சேவை தரம் 3:II, 3:I, 2:II, 2:I இல் உச்சச் சம்பளத்தைக் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகப் பெறுபவர்களில் விசேட சம்பள ஏற்றம் பெறாதோர்.

★ தகுதிகள் இருந்தும் ஆசிரிய சேவையில் அடுத்த தரத்துக்கு உள்வாங்கப்படாதோர்.

★ சேவையில் இருக்கும் போது 97 ஆம் ஆண்டுவரை பட்டம் பெற்ற ஆசிரியர்களில் பட்டதாரி சேவைக்குள் உள்வாங்கப்படாதோர்.

★ பல்வேறு ஆண்டுகளில் ஆசிரிய நியமனம் பெற்று நிரந்தர நியமனக் கடிதம் பெறாதோர்.

★ இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் உட்பட 1997 ஆம் ஆண்டுக்குரிய இடர்க்காலக் கொடுப்பனவு கிடைக்காதோர்.

★ 1997 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட காப்புறுதித் திட்டத்துக்குள் உள்வாங்கப்படாதோர்.

★ பின்தங்கிய பிரதேசங்களில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்களில் கஷ்ட பிரதேச விசேட படி கிடைக்காதோர்.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை விட வேறு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் அவர்களும் தொடர்பு கொள்ளும் படியும், என்றும்—

இந்த விடயம் வடமராட்சி, தென்மராட்சி, தீவகக் கல்வி வலயங்களில் கடமை புரியும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் பொருந்தும் எனவும்— த. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது திணைக்களத்தின் சார்பில் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளை, கணக்காளர் த. சுதந்திரபாலன், நிர்வாக அதிகாரி இ. நாகராசா, பதவிநிலை உதவியாளர் அ. எமிலியானொஸ், விசேட பதவிநிலை உதவியாளர் அ. தவராசா ஆகியோரும் —

சங்கத்தின் சார்பில் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், நிதிச்செயலாளர் யே. யேசுதாசன், நல்லூர் கிளைத் தலைவர் அ. அழகரெத்தினம், செயலாளர் அ. கோகிலன், யாழ் கிளைச் செயலாளர் எஸ். நகுலநாதன், பொருளாளர் திருமதி க. கமலராஜா ஆகியோரும் [illegible]

[இ—3]


# ராஜேஸ் கோல்ட் ஹவுஸ்

★ நகை தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும்

★ ஓடர் நகைகள் அசல் 22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.

ராஜேஸ்வரன்
உரிமையாளர்

ராஜேஸ் கோல்ட் ஹவுஸ்,
சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(66271)



# கண்ணீர் அஞ்சலி

பாதுகாப்பு சார்ஜனாக (Sergeant) எங்கள் பகுதியில் கடமையாற்றிய

**சீ. கு. அமிர்தரஞ்சன்**

அவர்களின்திடீர் மறைவால் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எங்கள்ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைவேண்டுகின்றோம்.

பாதுகாப்பு அதிகாரியும்,
சக பாதுகாப்பு உத்தியோகத்தர்களும்,
இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

(சி-7743)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு சென்று நிலைமையை நேரில் ஆராய்ந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 2

தெல்லிப்பழை புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு டாக்டர்கள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்றுவிஜயம் செய்து கட்டடம் தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி ந. கனகரத்தினம், யாழ். பிராந்திய சுகாதார வேலைகள் பிரிவைச் சேர்ந்த டாக்டர் செல்வி உமா சிவபாதம், கட்டடத் திணைக்கள பொறியியலாளர் என். தேவராசன், தொழில் நுட்ப உதவியாளர் கே. சிவகுருநாதன், வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். குகராஜா ஆகியோரே நேற்று தெல்லிப்பழைக்கு சென்று புற்று நோய் ஆஸ்பத்திரிகட்டட நிலைவரத்தைப் பார்வையிட்டனர்.

சேதமடைந்த நிலையிலிருக்கும் இந்த கட்டடத்தின் புனரமைப்புத் தொடர்பாக அங்கு விஜயம் செய்த மேற்படி குழுவினர் அறிக்கை ஒன்றைத் தயாரித்து சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த அறிக்கையினைத் தொடர்ந்து இந்த ஆஸ்பத்திரிக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் இயங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-ரி)

# தீ விபத்தில் 4 குழந்தைகள் பலி

புதுடில்லி. ஜூன் 2

இந்தியாவின் பழையடில்லியின் லால்வொன் பகுதியில் நிகழ்ந்த தீ விபத்தில் 4 குழந்தைகள் உட்பட 20 பேர் உடல் கருகி இறந்தனர். 41 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தப் பகுதியில் உள்ள இரசாயன விற்பனைக் கடை ஒன்றில் தற்செயலாக ஏற்பட்ட தீ ஏனைய அயல் பகுதிகளுக்கும் பரவியதாலேயே இத்தகைய துயரச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

டில்லி லோக்மான் ஜெயப்பிரகாஷ் மருத்துவமனையில் காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் வாஜ்பாய் இந்த மருத்துவமனைக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ளவர்களின் நிலைமையை நேரில் கேட்டறிந்தார்.

இதேவேளை இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என டில்லி சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(இ-க)

# உயர்தரப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 2

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜீ. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றவுள்ள கலைப் பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும் யாழ் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெற விருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கருத்தரங்கில் நாளை காலை 9.30 மணி முதல் 12.30 மணிவரை — தமிழ், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களும் —

பிற்பகல் 1.00 மணி முதல் 2.30 மணி வரை - புவியியல் பாடமும் நடைபெறும்,

நாளை மறுதினம் காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை — தமிழ், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களும் —

பிற்பகல் 1.00 மணி முதல் 2 30 மணி வரை — இந்து சமயம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களும் — இடம்பெறும்.

(உ-3-க)

# தென்மராட்சியில் 5 பாடசாலைகளில் ஜேர்மன் உதவியுடன் அடிப்படை வசதி

தென்மராட்சி, ஜூன் 2

தென்மராட்சி கல்வி வலயத்தை சேர்ந்த ஐந்து பாடசாலைகளைத்தேர்ந்தெடுத்து அவற்றுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஜீ. ரி. இஸட் நடவடிக்கை எடுத்துள்ளது.

குடிதண்ணீர் கிணறு, மலசல கூடம் போன்றவை இந்தப்பாடசாலைகளில் அமைத்துக் கொடுக்கப்படும். இதற்கான கட்டடப் பொருள்கள் மற்றும் உபகரணங்களை ஜீ. ரி. இஸட் நிறுவனம் வழங்கும்.

அந்தந்தப் பாடசாலை அபிவிருத்திச் சபையினர் இந்த வேலைகளைச் செய்து முடிக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# வெலிகமவில் குண்டு வெடிப்பு

கொழும்பு, ஜூன் 2

வெலிகமவில பொல்வத்து மோதர என்னும் இடத்தில் உள்ள ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்; மூவர் காயம் அடைந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-6)

# பெற்றோரை தவறவிட்ட சிறுவன்

சுன்னாகம், ஜூன் 2

பெற்றோரை தவறவிட்ட நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் சுன்னாகம் நூல் நிலையத்துக்கு அருகில் உள்ள இனிதா வைத்திய நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளான்.

குட்டி என்ற இந்தச் சிறுவன் இராமசாமி என்பவர் தனது தந்தை என்று கூறியுள்ளான்.

பிரஸ்தாப சிறுவனின் பெற்றோரை வந்து சிறுவனை அழைத்துச் செல்லுமாறு கோரப்பட்டுள்ளது.

[உ-3)

# மாணவர் மன்ற சஞ்சிகை வெளியீடு

நெல்லியடி, ஜூன் 2

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற வருடாந்த ஒன்று கூடலும் 'கலை ஊற்று' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

மாணவர் மன்றத் தலைவர் த. தர்சன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் இலங்கை வங்கியின் காங்கேசன்துறைக் கிளை முகாமையாளர் என். சிவரட்ணம் சஞ்சிகையைவெளியிட்டு வைப்பார்.

(இ-109)

# பாதுகாப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்)

அமைப்பு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

'துப்பாக்கிக்குண்டுக்குஎனது தந்தையும், கணவரையும்பறிகொடுத்தேன் எனவே எனது ஆட்சியில் படுகொலைகளுக்கு இடமளிக்கமாட்டேன்' என ஜனாதிபதி பிரகடனம் செய்திருந்தார். இன்னும் படுகொலைகள்தொடர்வதைப் பார்க்கும் போது ஜனாதிபதி மீது நாம் வைத்துள்ள அந்த நம்பிக்கை வீணாகி விட்டது போல் தோன்றுகின்றது.

யாழ். குடாநாடு தவிர்ந்த ஏனைய தமிழ் பிரதேசங்களில் வவுனியா, திருமலை, மட்டுநகர், அம்பாறை ஆகிய பகுதிகளில் உள்ளூராட்சிச் சபைகள் எவ்வித இடையூறுகளுமில்லாமல் — 4 வருடங்கள் மட்டுமல்லாமல் மேலதிகமாக ஒரு வருடமும் — சிறப்பாக இயங்கி அவ்வப்பகுதி மக்களுக்கு சிறந்த சேவையாற்றியுள்ளன. அந்தப் பிரதேசங்களைப் போலவே குடாநாட்டையும், உள்ளூராட்சிச் சபைகளுக்கூடாக அபிவிருத்தி செய்யும் நோக்கில் செயற்படும் போது இவ்வாறான படுகொலைகள் தடையாக வருகின்றன. ஏனைய பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகள் வெற்றி கண்டுள்ள போதிலும் குடாநாட்டு அபிவிருத்திக்கு மட்டும் தடைவிதிக்கப்படுகிறது.

அபிவிருத்திப் பணிகளில் முன்னேற்றங்கள் கண்ட சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்ததும் உடன் தேர்[illegible] தேர்தலுக்கான சூழ்நிலை இல்லை எனக்கூறி தட்டிக்கழித்து வரும் அரசு, அப்பகுதிகளை விட மோசமானதொரு சூழ்நிலையில் இங்கு தேர்தலை நடத்தி, தெரிவாகிய உறுப்பினர்கள், தலைவர்கள் கொல்லப்படுவது குறித்து எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமல் இருந்து வருகிறது.

''பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து குடாநாட்டை மீட்டு விட்டோம்; விரைவில் சமாதானத்தை ஏற்படுத்துவோம் அபிவிருத்தி செய்வோம்'' என குடா நாட்டு மக்களில் அக்கறை கொண்டவர்களாகவும், கருணையுள்ளவர்களாகவும் பேச்சில் மட்டும் அரசு காட்டிக் கொள்கிறது. செயலில் எவ்வித முன்னேற்றமுமில்லை உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து அரசுக்கும் அரசின் தலைவிக்கும் பல தடவைகள் எடுத்துக் கூறியும் எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இம் மாத இறுதிக்குள் உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் அனைத்து உள்ளூராட்சிச் சபைகளிலுமுள்ள எமதுகட்சி உறுப்பினர்களும் இராஜினாமாச் செய்யவுள்ளோம். உள்ளூராட்சி சபைகளின் எதிர்காலம், உறுப்பினர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக குடாநாட்டின் சபைகளில் பிரதிநிதித்துவம் செய்யும் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3-7)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

இப்பல்கலைக் கழகத்தில் கீழ்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் 20 - 06 - 1999 வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி:-

தட்டெழுத்தாளர் ( சிங்களம் )

அமைய அடிப்படை

சம்பளம்:- ரூ. 184.16 நாள் ஒன்றிற்கு.

தகைமைகள்:-

1. இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. ( சாதாரண தரம் ) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். திறமைச் சித்திகளுள் சிங்கள மொழி அல்லது சிங்கள இலக்கியம் அடங்கியிருத்தல் வேண்டும்.
2. சிங்களத் தட்டெழுத்தில் பின்வரும் ஆகக் குறைந்தவேகத்துடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்:

தட்டச்சில் பொறித்தல்- நிமிடமொன்றுக்கு 20 சொற்கள்.

வயது:- 45வருடங்களுக்கு மேற்படலாகாது.

தெரிவு:- தேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

குறிப்பு:- கணனியில் சிங்கள எழுத்துச் சேர்த்தல் அனுபவம் / அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20 ரூபாவை யாழ்ப்பாணப் பலகலைக் கழக மக்கள் வங்கிக் கிளையில் அல்லது சிறாப்பரின் முகப்பு மேசையில் செலுத்திய பின்னர் இப்பல்கலைக் கழகத் தாபனக் கிளையில் உதவிப் பதிவாளர் ( கல்விசாரா ) அலுவலகத்தில் பெறக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், விவரங்களையும் பெற விரும்புவோர் இப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் 20/- பெறுமதிக்குப் பெறப்பட்ட காசுக் கட்டளை / அஞ்சல் கட்டளையுடன் 23X10 ச. மீற்றர் சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவான விவரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

01 - 06 - 1999

(சி/7748)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## கலைப்பீடப் பரீட்சைகள் 1997

முதலாம் ஆண்டு கலைப்பீடப் பரீட்சை 1997

பொதுக்கலைமாணிப் பரீட்சை, பகுதி - I, II 1997

சிறப்புக்கலைமாணிப் பரீட்சை, பகுதி I, II, III 1997

மேற்குறித்த 1997 ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்குத் தகுதியுடைய மாணவர்கள் கலைப்பீட அலுவலகத்திலிருந்து உரிய விண்ணப்பப் படிவங்களை 01-06-1999 ஆம் திகதியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்த விண்ணப்பப் படிவங்களை 30-06-1999 ஆம் திகதிக்கு முன்னர் கலைப்பீட அலுவலக உதவிப் பதிவாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் பல்கலைக் கழகக் காசாளரிடமோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

30-06-1999 ஆம் திகதிக்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

— பதிவாளர்

31-05-1999

(சி/7750)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொசோவோ பிரச்சினை தீர்வுக்கு ஐரோப்பிய ஒன்றியம் முயற்சி

## பின்லாந்து ஜனாதிபதி பெல்கிரேட் பயணம்

பிரிஸ்தினா ஜூன் 2

கொசோவோ பிரச்சினைக்கு ராஜீகரீதியில் தீர்வுகாணும் முயற்சியில் ஐரோப்பிய ஒன்றியம் இறங்கியுள்ளது.

இந்த முயற்சிக்கு யூகோஸ்லாவியாவின் பதில் எவ்வாறாக இருக்கும் என்பதை அறிந்து கொள்ளும் முகமாக பின்லாந்து ஜனாதிபதி மார்கிட் அஸிஸ் தாமியை பெல்கிரேட்டுக்கு அனுப்ப ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

பின்லாந்து ஜனாதிபதி பால்கன் பிரதேசத்தின் ரஷ்யாவின் சிறப்புத் தூதுவரான விக்ரர் சொனோமைடியுடன் இன்று பெல்கிரேட் செல்லவுள்ளார்.

15 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னணி நாடுகள் நேட்டோ அமைப்பைச்சேர்ந்தவை ஆகும் அவை யூகோஸ்லாவியா மீதான வான் தாக்குதலில் பங்கு கொண்டுள்ளமை தெரிந்ததே.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் யூகோஸ்லாவிய ஜனாதிபதி மிலேசேவிக்குக்கும் இடையிலான முதலாவது சந்திப்பாக பின்லாந்துஜனாதிபதியின் விஜயம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

[இ-க]

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்

கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூடப்பட்ட அரச திணைக்களங்கள் தொடர்ந்து செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மூடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தபால், வங்கி ஆகியவற்றுடன் தொடர்புடைய பணிமனைகள் தவிர்ந்த அனைத்துத் திணைக்களச் சேவைகளும் குறிப்பிட்ட இரு நாள்களும் மூடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள திணைக்களப் பணிமனைகளுக்குப் புலிகளின் அறிவுறுத்தல் கடிதங்கள் கிடைத்ததையடுத்து சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரிப் பிரதேசசபை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஆகியவற்றின் பணிமனைகளும் நேற்றுச் செயல் இழந்தன.

(உ-3-5-31-15-139-86-51)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். மாவட்ட அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கி ஆகியவற்றின் உயர் அதிகாரிகளை நேற்று நண்பகல் பலாலியில் சந்தித்த சமயம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தங்களது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அலுவலகங்களைப் பூட்டுவதைத் தவிர தங்களுக்கு வேறு வழி ஏதும் இல்லை என்று அரச திணைக்களத் தலைவர்கள் நேற்று நடந்த இரண்டாவது சந்திப்பில் தெரிவித்தனர்.

''அரச ஊழியர்கள் தமது கடமைகளைச் செய்ய கடப்பாடுடையவர்கள்'' என்று திட்டவட்டமாக இராணுவத் தளபதி திணைக்களத் தலைவர்களிடம் தெரிவித்ததாகவும் அறியவந்தது.

(உ-3-5-15-139-7-86)

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

சர்வதேச மனிதஉரிமை அமைப்பின் இரு பிரதிநிதிகளும் அப்போது சமுகமளித்திருப்பர் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3-6-21)

## ரகுவின்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதைத் தொடர்ந்து பூதவுடல் அவரதுகந்தர்மடத்தில் உள்ள வீட்டில் வைக்கப்பட்டது.

அதையடுத்து வாகன அணியாக ஊர்காவற்றுறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மெலிஞ்சிமுனை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவருடன் சென்று உயிரிழந்த இவரின் மைத்துனரின் பூதவுடலும் ஊர்காவற்றுறையில் அடக்கம் செய்யப்பட்டது.

இருவரின் மரணத்துக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் வாழை, தோரணங்கள், கறுப்புக் கொடிகள் ஈ.பி.டி.பி அலுவலகங்களில் கட்டப்பட்டிருந்தன.

வாகனங்களில் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தன. (உ-3-5-15-17 7-86-180)

# கொடுப்பனவு இல்லை சங்கங்கள் பாதிப்பு

பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களின் தென்மராட்சிக் கொத்தணியைச் சேர்ந்த கொடிகாமம், பளை ஆகிய சங்கங்களினால் கடந்த மாதங்களில் திக்கம் வடிசாலைக்கு வழங்கப்பட்ட கள்ளுக்கான முழுமையான கொடுப்பனவுகள் வழங்கப்படாததால் சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இரு சங்கங்களினாலும் கடந்த மாதங்களில் மாதாந்தம் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட போத்தல் கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவற்றுக்கான உரிய கொடுப்பனவுகள் திக்கம் வடிசாலையினால் வழங்கப்படாததால் அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவையும், பணியாளர்களுக்கான சம்பளத்தையும் முழுமையாக வழங்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை சமூக விஞ்ஞான மன்றம் நடத்தும் கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு பொருளியல்துறை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

''அபிவிருத்தியும் சமூக மயமாக்கலும்'' என்ற தலைப்பில் கலாநிதி எஸ். கே. எஸ். நாதன் கருத்துரை வழங்குவார். (உ-3-க)

## பயிற்சி நெறி

வலி. கிழக்கு, ஜூன் 2

''பங்கேற்பு முறையிலான போசாக்கு'' என்ற தலைப்பில் சுகாதாரத் தொண்டர்கள் சமூக அனுசரணையாளர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாநகராட்சி மன்றச் சுகாதார சேவைப் பிரிவால் நடத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களூடாக 1200 ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் இந்த பயிற்சி நெறியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(உ-180)

## கண்ணிவெடியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்தவர்கள் உடனடியாக பதவியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் —

கிளைமோர் தாக்குதலை நடத்தியவர்கள் சிறு ஆயுதங்களைக் கொண்டும் தாக்கினர் என்றும் — பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

நெலும்வேவ, கிறிபான்வேவ ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களே இதில் பாதிக்கப்பட்டனர் என்றும் —

இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என்றும் — மேலும் அது தெரிவித்தது. (உ-3-க)

## மந்திகைக்கு மருந்து

நெல்லியடி, ஜூன் 2

மந்திகை மருத்துவமனைக்குத் 99ஆம் ஆண்டின் இரண்டாம் கந்தாயத்துக்கான மருந்து வகைகள் நேற்றுக் காலை யாழ். பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டன.

(இ-109)

## லங்கா முடித்த இன்று வரும்

திருகோணமலையிலிருந்து 350 அகதிகள் உட்பட ஆயிரத்து 200 பயணிகளுடன் 'லங்கா முடித' கப்பல் இன்று காங்கேசன்துறைக்கு வந்து சேரவிருக்கிறது

பயணிகளை இறக்கிய பின்னர் இந்தக் கப்பல் கொழும்பு சென்று குடா நாட்டுக்கான அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இங்கு திரும்பும் எனத் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

## சித்திரவதை...

[முதலாம்பக்கத் தொடர்]

டுள்ள போதும் சித்திரவதைகள் பெருமளவில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்று அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குற்றம் செய்தவர்கள் என்று கருதப்படுவோரையும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவோரையும் படையினரும், பொலீஸாரும் தொடர்ந்து இன்னமும் சித்திரவதை செய்து வருகின்றார்கள்:

மிளாகாய் பொடி அல்லது பெற்றோல் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பைகளை கழுத்தில் கட்டுவது—

கிரிக்கெட் மட்டைகளாலும் மண் நிரப்பப்பட்ட குழாய்களாலும் அடிப்பது—

சிகரெட் முனையால் சுடுவது—

மின்சார அதிர்ச்சி கொடுப்பது—

என்பன உட்பட பல்வேறு சித்திரவதைகள் படையினராலும், பொலீஸாராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சித்திரவதை செய்வதை அனுமதிக்க முடியாது என்று பொலீஸாருக்கும் படையினருக்கும் அரசு அறிவிக்கவேண்டும் -- என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

இவ்வறான சித்திரவதைகளை புலிகளும் மேற்கொண்டு வருவதாகவும்—

14 வயதுச் சிறுவர்களைக் கூட புலிகள் தமது அமைப்பில் சேர்த்துக் கொள்வதாகவும்—

சர்வதேச மனிதாபிமான சட்டங்களை புலிகள் மதித்து நடக்க வேண்டும் என்று கோருவதாகவும்—

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-6)


LOGES SHEET INDUSTRIES

Micro Concrete Roofing Sheet Production Center



லோகேஸ் கூரைத்தகட்டுத் தொழிற்சாலை

மங்களகரமான

திறப்பு விழா

நிகழும் பிரமாதி வருடம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் [ 03-06-99 ]
வியாழக்கிழமை பகல் 10-00 மணியளவில் வரும் சுபவேளையில்
எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட



லோகேஸ் கூரைத்தகட்டுத் தொழிற்சாலை

என்னும் ஸ்தாபனத்தை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன இணைப்பதிகாரி
MR. STEFFEN R. WIRTH அவர்கள்
( CO - ORDINATOR, G. T. Z., J. R. P. )
ஆரம்பிக்கவிருப்பதால் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கும்வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

- MANAGING DIRECTOR



Loges Sheet Industries,
Near Pararasa Segara Pillaiyar Kovil,
Inuvil.

(66179)



எமது புதிய
வீடியோ CD
வெளியீடு!

கார்த்திக், அஜித்
மீனா நடித்த

ஆனந்த பூங்காற்றே

வீடியோ
விமல்
யாழ்ப்பாணம்.

(சி/7752)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்து பணிமனையில் 02 - 06 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org